விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 15 வெள்ளிக்கிழமை (28.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 40

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

# வட - கிழக்கை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச ரீதியாக தீவிர முயற்சி

## எடுத்துவருவதாக பாலசிங்கம் முல்லைத்தீவில் உரை



(முல்லைத்தீவு)

ஆழிப்பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற நிதியுதவிகள் யாவும் சரியான முறையில் எவ்வித பாகுபாடுமின்றி பகிரப்படவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமாகிய அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பகுதிகளை நேற்றைய தினம் நேரில் சென்று பார்வையிட்ட அன்ரன் பாலசிங்கம், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசு சுனாமி அனர்த்தத்தினை தனது அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பார்க்கிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கென கிடைக்கப்பெறும் நிதியினை வேறு வழிகளில் தமது அரசினைப் பலப்படுத்தவும் இராணுவ வாகனங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்யவும் தமது அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்தவும் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தோடு இருக்கிறது.

இதற்கு நாங்கள் உலக நாடுகளிடம் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளோம். அதாவது வட - கிழக்குத்தான் பெருமளவான அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இப் பகுதிகளில்தான் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளார்கள்.

இவ் அனர்த்தம் மட்டுமல்ல காலம் காலமாக 30 வருடங்களுக்கு மேலாக எமது மீனவச் சமூகம் பெரும் துன்பத்திற்குள் தள்ளப்பட்டு வருகின்றது. இராணுவம், கடற்படை என்பவற்றில் ஒடுக்குமுறை காரணமாக எமது மீனவச் சமூகம் நீண்ட காலமாக பாரிய உயிரிழப்புக்களை சந்தித்து வந்துள்ளது.

நோர்வே அரசின் முக்கிய தலைவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு நிவாரணப் பணிகளுக்கு டோக்கியோ நிதியுதவியில் ஒரு பகுதி

## உதவும் நாடுகள் வழங்க முடிவு என விசேட தூதுவர் அகாசி அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் டோக்கியோவில் தாம் வழங்க இணங்கிய உதவிகளின் ஒரு பகுதியை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாசி தெரிவித்துள்ளார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை பிரஸல்ஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயே யசூசி அகாசி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஐரோப்பிய யூனியன் உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். இம் மாநாடு குறித்து யசூசி அகாசி மேலும் தெரிவிக்கையில்,

இதற்கு முன்னர் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் இணங்கியிருந்தன. இதில் ஒரு பகுதியை தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிற்கு வழங்கு [illegible] தீர்மானித்துள்ளோம்.

மேலும இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என்பதே நிதியுதவிகள் வழங்கும் நாடுகளின் விருப்பமாகும்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் அண்மையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதன் மூலம் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் தகர்ந்து போயிருந்த நம்பிக்கை மீள ஏற்பட்டிருப்பதாக சர்வதேச சமுகம் நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் அகாசி தெரிவித்துள்ளார். (த-08)

## ரணில் நாளை நோர்வே பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை நோர்வேக்கு பயணமாகிறார். பின்னர் அங்கிருந்து பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நோர்வே செல்லும் ரணில் விக்கிரமசிங்க நோர்வேப் பிரதமர் பென்பிக்குடனும் இலங்கையின் சமாதான முயற்சியுடன் தொடர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் உறவுகளை இழந்தவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து காலிக்கு ரயிலில் சென்றுகொண்டிருந்த போது சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்கு உள்ளான குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸ் மற்றும் புதையிரத திணைக்களம் என்பவற்றிற்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இவ் அனர்த்தத்தில் தனது மனைவியையும் மாமியாரையும் பறிகொடுத்த பிரியங்கா பெரேரா என்பவரே மேற்படி வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மற்றும் ரயில்வேத் திணைக்களம் என்பன துரிதமான முறையில் நடவடிக்கை எடுத்திருந்தால் பல உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும் என அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இன்று பேரணி

(மன்னார்)

தமிழ்மக்கள் மீதான அரசின் அடக்கு முறைகளைக் கண்டித்து இன்று மன்னாரில் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தாயகப் பகுதிகளுக்கான சர்வதேச உதவிகளை வழங்க அரசு தவறியமை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளமைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தல், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் விசமப் பிரசாரங்களை நிறுத்துதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இக் கண்டனப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு மன்னார் வைத்தியசாலை முன்றலிலிருந்து ஆரம்பமாகும் இப் பேரணி மன்னார் மாவட்டச் செயலகத்தைச் சென்றடையும். அங்கு ஜனாதிபதிக்கான மகஜர், மன்னார் அரச அதிபரிடம் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரால் கையளிக்கப்படும்.

இப் பேரணியில் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## நாட்டின் தேசிய கொள்கை ஐ.தே.க. இன்று பிரகடனம்

(கொழும்பு)

நாட்டின் பொதுத் தேசியக் கொள்கை ஒன்று இன்று வெளியிடப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

காலத்துக்கு காலம் அரசாங்கங்கள் மாறும்போது தேசியக் கொள்கைகளும் மாற்றமடைந்து வருகிறது. கடந்த 50 வருடங்களாக இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.

இது மாற்றப்படவேண்டும். அரசாங்கங்கள் மாறினாலும் தேசியக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது.

இதுவே நாட்டின் அபிவிருத்திக்கு உதவும். ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தத் தேசியக் கொள்கைப் பிரகடனமானது ஏனைய கட்சிகளும் பரிந்துரைக்கும் யோசனைகளுக்கேற்ப இறுதி வடிவம் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (த-04)

# தமிழினம் உலகில் அனுதாபத்திற்குரிய ஓரினமாக இருப்பதை தேசியத் தலைவர் ஒருகாலமும் ஏற்றுக் கொண்டதில்லை

## நிதர்சன நிறுவனத்தின் ஒளிவீச்சுப் பொறுப்பாளர் வீரா ஒஸ்லோவில் உரை

(ஒஸ்லோ)

கடலிலே காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு லெப். கேணல் குட்டிசிறி உட்பட்ட பத்து வீரவேங்கைகளின் 12வது ஆண்டு நினைவேந்தலுடன், அலையின் அனர்த்தத்தில் உயிரிழந்த உறவுகளின் துயர் சுமந்த நினைவு எழுச்சி நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஒஸ்லோவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தாயகத்திலிருந்து வருகைதந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் நிதர்சன நிறுவன ஒளிவீச்சுப் பொறுப்பாளரும் கவிஞருமான வீரா சிறப்புரை ஆற்றியிருந்தார். தளபதி கிட்டுவின் பன்முக ஆற்றல், தமிழீழ விடுதலைக்காக தலைவருடன் தோளோடுதோள் நின்று கிட்டு ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்பிட்ட வீரா சுனாமி பேரழிவின் தாக்கம் குறித்து பேசியதோடு, சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஆழமான நீண்ட உரையினை ஆற்றியிருந்தார்.

சர்வதேச ஊடகங்களில் இந்த அழிவும் அவலமும் ஒரு செய்தியாகவே நோக்கப்படுகின்றது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், தமிழீழத் தேசியத் தலைவரைப் பொறுத்தவரையில் இந்த அழிவை சாதாரணமாக நோக்கமுடியாது. சுனாமி கடல் அதிர்வினால் உயிர்ப்பலியான தமிழீழ மக்கள், அதனால் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்கள் எமது போராட்டத்தினைத் தாங்கிய தூண்கள். போராட்டத்தினை வீச்சுடன் வளர்த்தெடுக்க உறுதுணையாய் நின்றவர்கள் அவர்கள்.

இந்த மக்கள் போராளிகளுககு சோறுதந்து அவர்களைக்காத்தவர்கள். எல்லைப் படைகளாக, கிராமியப் படைகளாகப் போர்க்களங்களில் நின்றவர்கள். காயப்பட்ட போராளிகளைக் காவிச் சென்று காப்பாற்றியவர்கள். குருதி சிந்திய போராளிகளுக்குத் தங்கள் குருதியைக் கொடுத்தவர்கள்.

எனவே, உறவுகளை இழந்து தவிக்கும் எமது மக்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் வாழ்நிலையை மேம்படுத்த வேண்டியவர்கள் நாங்கள்.

தமிழீழத் தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனமும் தற்துணிவும் புலம்பெயர் உறவுகளின் உச்சப் பங்களிப்பும் தன்னம்பிக்கை நிறைந்த பணியும் எமது மக்களின் அவசர மீட்புப் பணிகளை நேர்த்தியாகச் செய்யவழி ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் எமது பணி இத்துடன் முடிவடைந்துவிடவில்லை. எமது மக்களின் இழப்புகளும் இன்னல்களும் சொல்லில் அடங்காதவை.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு ஸ்ரீலங்கா இனவாத அரச மட்டங்களிலும் சர்வதேச மட்டங்களிலும் திரை மறைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பீதியூட்டுவதற்காக நான் இதைக் கூறவில்லை. தெளிவூட்டுவதற்காகவே இதனைக் கூறுகின்றேன். விழிப்புணர்வோடும் தன்னம்பிக்கையுடனும் நீங்கள் இருக்கவேண்டுமென்பதற்காகவே கூறுகின்றேன்.

எமது போராட்டத்தின் அடுத்த நகர்வு எவ்வாறானதாக அமையும் என்பதில் தலைவர் தெளிவாக இருக்கின்றார். புலிகள் தெளிவாக இருக்கின்றனர். அது ஒரு பாய்ச்சலாகவே இருக்கும்.

தமிழினம், உலகில் அனுதாபத்திற்குரிய இனமாக இருப்பதை தலைவர் அவர்கள் ஒருகாலமும் ஏற்றுக் கொண்டதில்லை, ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. இழப்புகளும் இன்னல்களும் அழிவுகளும் எமது போராட்டத்தில் பாய்சலை ஏற்படுத்தியது என்பது தான் வரலாறு.

இந்த கடல் அதிர்வு அனர்த்தத்தையும் பலமாக மாற்றி, ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தும் நுண் மதித்திறனும் தொலைநோக்குப் பார்வையும் தலைவரிடம் உண்டு. அடுத்த கட்டம் நிச்சயமாகப் பாய்ச்சலாகத்தான் இருக்கும்.

அது அரசியல் அங்கீகாரம் என்ற பாய்ச்சலா அல்லது எமது வாழ்வை நாமே தீர்மானிக்கின்ற போராட்டம் என்ற பாய்ச்சலா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களின் கைகளில் அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

தலைவர் தனது சேதியாக புலம்பெயர் மக்களுக்கு இதனைக் கூறச்சொன்னார். நெருக்கடிகளைக் கண்டு தன்னம்பிக்கையிழக்க வேண்டாம். அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு நான் தயாராகவுள்ளேன், தன்னம்பிக்கையோடு பலமாக இருங்கள். இது தான் தலைவர் சொன்ன சேதி என்று வீரா தன -துரையில் தெரிவித்தார். (ற)




## இராசி பலன்

**28.01.2005**
**(தை 15 வெள்ளிக்கிழமை)**
**திருதியை முன்னிரவு 9.29 மணிவரை**
**மகம் காலை 7.02 மணிவரை**
**பூரம் காலை 7.03 தொடக்கம்**
**இராகுகாலம் 11.06 - 12.36 மணிவரை**
**சுபநேரம் 06.36 -08.06 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சிறு வியாதி, மனச்சோர்வு, எடுத்தகருமங்கள் தாமதமாகும், அபகீர்த்தி. |
| இடபம் | உடல்நலக்குறைவு, எதிர்பாராத நன்மை, மனப்பயம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | பிரயாண நன்மை, சகோதரர் உதவி, தேகநலன், தெய்வ தரிசனம். |
| கடகம் | தொழில் சிந்தை, மாதர் நட்பு, பிரயாணம், உஷ்ண நிலை. |
| சிங்கம் | தெய்வ சிந்தை, பெரியோர் சந்திப்பு, வாக்கு மேன்மை, தொழில் விருத்தி. |
| கன்னி | காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, வேலைச் சுமை, உறவினர் வெறுப்பு. |
| துலாம் | இஷ்ட சித்தி, தெய்வ தரிசனம், பெருமையடைதல், சகோதரர் உதவி. |
| விருச்சிகம் | அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, மனமகிழ்ச்சி, சத்துருஜெயம். |
| தனுசு | புதிய திட்டமிடல், வஞ்சகம், பிரயாண பயம், காரிய தாமதம். |
| மகரம் | கோபப்படுதல், பிரயாண பயம், திடீர் நன்மை, காரிய தாமதம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, கலந்துரையாடல், போசன சுகம். |
| மீனம் | சத்துரு ஜெயம், மனமகிழ்ச்சி, செல்வாக்கு, நண்பர்கள் உதவி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## சிறு விளம்பரம்


**Spoken English With Grammer**

விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டங்களுடன் வகுப்புகள் நல்லூர், கொக்குவில் ஆகிய இடங்களில் (திங்கள் காலை 8.00 (புதிய நேரம்) நல்லூரில் மட்டும்) ஆரம்பமாகின்றது. தொடர்புகளுக்கு 021 222 2217 ஐங்கரன் தொலைத தொடர்புச் சேவை (077 6590427) (C/1051)


## பயிற்சி நெறி

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட மகளிருக்கான கைவினைப் பயிற்சி நெறி மாவட்ட தொழிற்றிணைக்களத்தினூடாக யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய வலயங்களில் நடாத்தப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்தே மேற்படி பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ப-51)

# சைவசமய அறிவுப் பரீட்சையும் செயல்முறைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம், பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கடந்த 51 வருடகாலமாக நடாத்தி வரும் சைவ சமய அறிவுப்பரீட்சை மற்றும் செயல்முறைப் போட்டி ஆகியவற்றை இம்முறையும் நடாத்தவுள்ளது.

சைவசமய அறிவுப் பீட்சை தரம்-1 தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர் மட்டத்திலும், கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சைவசமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் 26ஆம் திகதிகளிலும், செயலமுறைப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்தினம்பெப்ரவரி 3ஆம் திகதியாகும். இப்பரீட்சையிலும் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசுகள் மார்ச் மாதம் 8ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையிலும், போட்களிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் "இல.163, நாவலா வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

# நிப்பொன் கல்வி கலாசார நிலைய அதிகாரிகள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலைய புலமைப்பரிசு யாழ்.நிலைய மாணவ நிப்பொன் கொழும்பு, ஜப்பான் தலைமைக் காரியாலய நிருவாக உறுப்பினர், உத்தியோகத்தரின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00மணி முதல் பி.ப. 2.00மணி வரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ.மாவட்டத்தில் "நிப்பொன்" புலமைப்பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களையும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர், அதிபர், ஆசிரியர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடி நிப்பொன் கல்வி கலாசார நிலைய செயற்பாட்டை விரிவுபடுத்து முகமாகவும் கடந்தகால நடவடிக்கைகளைச் சரிபார்த்து மாணவர்களுக்கு பரிசில்கள், அன்பளிப்புகளை நல்குவதற்கும் ஸ்ரீலங்கா நிப்பொன் தலைமை காரியா லய அதிகாரிகள், நிர்வாக உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஜப்பானி லிருந்து ஜப்பான் நிப்பொன் நிர் வாக உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிறன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி, தம்பர் மண்டபத்தில் புலமைப் பரிசில் பெறும் பாடசாலையின் மாணவ, மாணவியர் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் தங்களின் கடந்த வருட வகுப்பு அறிக்கை, ஏனைய சான்றிதழ்கள் அனைத்தையும் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்குரிய 2005 ஆண்டு கல்விப் பரிசுப் பொதிகள் கொடுப்பனவுகள் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளதால் மாணவர்கள் அனைவரையும் தவறாது இதற்குச் சமுகமளிக்குமாறு நிப்பொன் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளரும், யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை கேட்டுள்ளார். (ற)

## கோரிக்கை

(முல்லைத்தீவு)

கடற்கொந்தளிப்பினால் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகள் மீள இயக்குவதற்கு வசதியாக இவ்வாறான பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்களை தற்காலிகமாக குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்காக கூரைவிரிப்புகளையும் சமயல்பாத்திரங்களையும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளேயிடம் கனகரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.. (ப-128)

# வட - கிழக்கிற்கு வெளிநாட்டுப் பிரமுகர்களை அனுமதிக்காமை அரசின் திட்டமிட்ட சதியே!

## தங்கேஸ்வரி எம்.பி சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

சுனாமிப் பேரலையின் அழிவுகளைப் பார்வையிட இலங்கைக்கு விஜயம்செய்யும் வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குச் செல்லவிடாமல் அரசாங்கம் திட்டமிட்டு சதிசெய்து தடுத்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ச.தங்கேஸ்வரி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுனாமிப் பேரலையினால் வடக்கு - கிழக்கு மாகாணமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் காலி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களே பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அரசினால் எடுத்துக் காட்டப்படுகின்றன. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பிரமுகர்களின் வடக்கு- கிழக்கு விஜயம் தடுக்கப்பட்டு அவர்களும் தென்னிலங்கை நோக்கியே திசைதிருப்பப்படுகின்றனர்.

தமிழ்மக்கள் புறக்கணிக் கப்பட்டதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் எந்திப் போராடநேரிட்டது. ஆனால் இன்று அவர்கள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சமாதான வழிக்குத் திரும்பியுள்ளனர். அப்படியான நிலையிலும் அரசு தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணிப்பது திட்டமிட்ட செயலன்றி வேறொன்றுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமசேவை உத்தியோகத்தர்களை நாடும் போது வாக்களர் இடாப்பில் அவர்களின் பெயர் இன்மையால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கமுடியாதென்று கிராமசேவை உத்தியோகத்தர்களால் பாதிக்கப்பட்டோர் திருப்பியனுப்பப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வாடகை வீடுகளிலும், அரச விடுதிகளிலும் குடியிருந்தவர்கள் அங்கு தம்மை வாக்காளராகப் பதிவுசெய்யாமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# சான்றிதழ் வழங்கல்

(பொன்னாலை)

மானிப்பாய் பிரதேசசபையால நடத்தப்பட்ட தையல்பயிற்சி டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச் சான்றிதழ்களை அலுவலக நேரத்தில் பிரதேசசபையின் திட்டமிடல் உள்ளூராட்சி அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-49)

# செலான் வங்கி உயர் அதிகாரிகள் நேற்று யாழ். குடாநாட்டுக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

செலான் வங்கியின் நிறைவேற்றுக் குழுவினரை உள்ளடக்கிய குழுவொன்று நேற்று யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்தது. செலான் வங்கியின் நிறைவேற்ற முகாமையாளரும் பணிப்பாளருமான அஜிற்ரா அஸ்குயல், நிறைவேற்று உத்தியோகத்தர்களான பண்டுக ஜெயமனேன், கலாநிதி நிசால் ரமநாயக்க, சி.குலேந்திரா சேயோன், பிரதிப் பொதுமுகாமையாளர் பத்மநாதன் நிரஞ்சன் ஆகியோரே நேற்று யாழ் வந்திருந்தனர்.

இவர்கள் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து யாழ்.குடாநாட்டின் நிலைமைகளை விரிவாகக் கேட்டு அறிந்துகொண்டனர்.

சுனாமியினால் பாதிப்படைந்த ஆதரவற்ற குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு செலான் வங்கி உதவ ஆர்வமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயரின் ஆலோசனைகளையும் உதவிகளையும் இதற்காகப் பெறும் நோக்கமாகவும், கடற்றொழில் செய்யும் மீனவருக்கு இலகு கடனில் மீன்பிடிப்படகுகள், வலைகள் போன்ற உபகரணங்களை வழங்குவது பற்றியும் மேற்படி குழுவினர் ஆயருடன் விரிவாகக் கலந்துரையாடினர்.

இதேவேளை மேற்படி குழுவினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஊர்காவற்றுறைக்குச் சென்று அந்தோனியார் கல்லூரிக்குக் கணனிகளை வழங்கினர்.

மேற்படிகுழுவினர் இன்று காலை 8.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன் பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி மற்றும் கோண்டாவில் பகுதி விவசாயிகளைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான விவசாயக் கடன் உதவிகளை வழங்குவதைப் பற்றியும் ஆராயவுள்ளதுடன் பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறையில் பாதிக்கப்பட்ட மீனவரையும் சந்திக்கவுள்ளனர். (ந-5)

# தொடர்பு கொள்க!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் சி.பி.ஆர் தொண்டர்களாக கடமையாற்றுபவர்கள் அனைவரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் த.புரட்சிதாசன் கேட்டுள்ளார். (ந-19)

# மைதானங்கள் புனரமைக்கப் படாமையால் விளையாட்டுத் துறையில் பெரும் பின்னடைவு

## தென்மராட்சியில் சமூக ஆர்வலர்கள் அதிருப்தி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளினதும், சனசமூக நிலையங்களினதும் விளையாட்டு மைதானங்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்து வருவதால், விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி பின்னடைந்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் பெரும் அதிருப்தியும், கவலையும்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் சந்திரபுரம் மகாவித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும், மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையம், மட்டுவில் தெற்கு வளர்மதி சன சமூக நிலையம் மற்றும் சாவகச்சேரி நகர மைதானம் ஆகியவற்றில் விஸ்தீரணமான விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன.

ஆயினும் 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தென்மராட்சி யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து மேற்படி விளையாட்டு மைதானங்கள் எத்தகைய பராமரிப்பும் இன்றி இருந்துவருவதால் அங்கு விளையாட்டு முயற்சிகள், பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்துவருகின்றன.

இத்தகைய விளையாட்டு மைதானங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் அவற்றின் தரம் பேணுவதற்கும் பெரும் தொகை நிதி தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவை உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டால் இப்பிரதேசத் தில் விளையாட்டு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-16)

# மிருகவதைச் சட்டத்தின் கீழ் நான்கு ஆடுகள் பறிமுதல்

வல்வெட்டித்துறைப் பகுதியைச சேர்ந்த நபரொருவரால் பெட்டியில் வைக்கப்பட்டு 4 ஆடுகள் கொண்டுசென்றமை தொடர்பாக பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்தனர்.

வழக்கில் மேற்படி நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் மேற்படி நபரால் கொண்டுசெல்லப்பட்ட ஆடுகளைப் பறிமுதல்செய்ததுடன், கடுமையான எச்சரிக்கையும் செய்தார்.

அத்துடன், ஆடுகள் நான்கையும் நாளை சனிக்கிழமை காலை ஏலத்தில் விற்குமாறும் உத்தரவு இட்டார்.

இதேவேளை சட்டவிரோதமாகக் கொண்டுசெல்லப்பட்ட போது கைப்பற்றப்பட்ட சவுக்கு விறகுகளும் அன்றைய தினம் ஏலத்தில் விற்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (ப-101)

# நால்வருக்குச் சிறை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் அண்ணாசிலையடிப் பகுதியில் இரண்டு பெண்களையும், இரண்டு ஆண்களையும் கத்தியால் வெட்டியும், குத்தியும், சைக்கிள்செயினால் தாக்கித் துன்புறுத்தியதன் குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கும் பிறிதொரு நபருக்குமாக நால்வருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்,

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் இந் நால்வருக்கும் கடந்த 26 ஆம் திகதி தலா ஒருவருடம் சிறைத்தண்டனை விதித்ததுடன், 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அபராதத்தைச் செலுத்தத் தவறின் மேலும் நாலுமாத சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டார். (ப-101)

# யாழ்ப்பாணக் கல்லூரியை மானிப்பாய் இந்து வென்றது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ போட்டி யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 98 ஓட்டங்களிற்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக கணேசானந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றார். யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் தனாகரன் 5 விக்கெட்டுக்களைப் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 23 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக யதுஷன் 7 ஓட்டங்களைப் பெற்றார். மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக வினோத் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடி 48 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக கணேசானந்தன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக தனாகரன் 8 விக்கெட்டுக்களைப் பெற்றார். யாழ்ப்பாணக் கல்லூரி அணி 123 ஓட்டங்களையும் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கி 59 ஓட்டங்களுக்கு சகல விக்கெடடுக்களையும் இழந்தது. யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக தனாகரன் 22 ஓட்டங்களைப்பெற்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அடுத்த போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வரும் 28, 29 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சந்திக்கின்றது. (ப-39)





புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயத் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் புங்குடுதீவு மடத்துவெளி பூசகர் மனோகரக்குருக்கள், பாடசாலை அதிபர் ந.இராசதுரை ஆகியோர் நிற்பதையும், இதன்போது நடைபெற்ற கலை நிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

# சுனாமி அழிவுகளில் இருந்து மீள முளைவிடுவோம்!

## பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் நம்பிக்கை



(சாவகச்சேரி)

**20 வருட பேரினவாத இடர்களால் துன்பப்பட்டு துயரப்பட்டு எம்மக்களை இயற்கையும் 3 நிமிடங்களுக்குள் சொல்லொ ணா துன்பதுயரங்களுக்குள் தள்ளிவிட்டது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கடல் அனர்த்தத்தில் உயிர்நீத்த மக்களுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பூதம், பூதம் என்று மிரட்டுவார்கள். ஆனால் பஞ்சபூதங்களில் ஒன்றான நீரால் ஏற்பட்ட அனர்த்தத்தை பார்த்த போதுதான் பூதம் எவ்வளவு பயங்கரமானதென உணரக்கூடியதாகவுள்ளது.

அனர்த்தத்தால் எம் உடன்பிறப்புக்கள துன்பப்பட்ட வேளை விடுதலைப்புலி உறுப்பினர்கள் உடன் செயற்பட்டு துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். மக்களும் அவர்களுடன் இணைந்து துரிதமாகச் செயல்பட்டார்கள். இவர்களின் பணிகள பாராட்டபபட வேண்டியவை.

பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் மீண்டும் தாம் முளைவிட்டெழுவோம் என்ற நம்பிக்கையை மனதில் கொள்ளவேண்டும். அவர்களை உற்சாகப்படுத்த மாணவர்கள் தமது ஆசிரியர்களுடன் சென்று அவர்களுடன் அளவளாவி அவர்கள் உற்சாகத்தைப பெருக்கி ஆற்றுப்படுத்த முன்வரவேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

மேற்படி நிகழ்வில் கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய பிரார்த்தனைகளும் நடைபெற்றன. திணைக்களத் தலைவர்கள், பிரமுகர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு ஈகைச்சுடர்களை ஏற்றி மலர் அஞ்சலிகளையும் செலுத்தி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதில் அஞ்சலி உரையாற்றிய தென்மராட்சி அர்சியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவிக்கையில்,

என்றும் கண்டிராத பேரதிர்ச்சியில் எம்மை இவ் அனர்த்தம் இட்டுச் சென்றுவிட்டது. இளம் பிஞ்சகள் எமைப் பிரிந்துவிட்டனர். குடும்பங்கள் பல சின்னாபின்னப்பட்டுவிட்டது. இப்பேரதிர்ச்சியில் இருந்து மீள எம் உறவுகளுக்கு நாம் நம்பிக்கை கொடுக்கவேண்டும்.

தேசியத் தலைவரின் வழிகாட்டலில் எமது அமைப்புச் சார்ந்த அனைத்து வேலைத்திட்டங்களும்
மள் கட்டுமானம், ஆற்றுப்படுத்துகை, வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல, போன்ற வகையில் கவனம் செலுத்தப்படுகிறது.

எமது மக்களது வாழ்க்கைத்தரதைக் கட்டியெழுப்ப எமது அமைபபுடன் மக்களும் சேர்ந்து கை கோர்த்து புதுயுகம் அமைத்துக் கொடுப்போம் என்றார். (ப-29,9)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பொது அமைப்பின் மாதாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 11.00மணிக்கு நடைபெறுவுள்ளது.

அன்றைய கூட்டத்திற்கு அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-9)

## பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கையூட்டும் முகமாக நடைபெற்ற 'நம்பிக்கை ஒளி' நிகழ்வு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையூட்டும் முகமாக நேற்றுமுன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நிகழ்வொன்றை நடாத்தியது.

'நம்பிக்கை ஒளி'என்ற பெயரில் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச பிரமுகர்கள், மதத்தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த நிகழ்வு நடாத்தப்பட்டதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமி அனர்த்தக் குழுவின் பணிப்பாளர் நரேந்திரன் தெரிவித்தார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்காகவும், உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாகவும் முதல்மாத முடிவினை நினைவு கூர்ந்தே இந்த நிகழ்வை நாங்கள் ஒருங்கிணைத்திருந்தோம்.

அனைத்து மத மக்களும், ஒன்றிணைந்து இலங்கை முழுவதும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகளையும, அவர்களுடைய மன ஆதங்கங்களையும், அங்கலாய்ப்பையும் புரிந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை எப்படி திறமையாக செய்து கொடுக்க முடியுமோ, முடிந்தளவுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## சுனாமியால் உயிரிழந்தோருக்கு வவுனியாவில் நினைவுத் தூபி

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த சுனாமி அனர்த்தத்தினால் மரணமானவர்களுக்கான நினைவு தூபி நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகத்தினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

பூந்தோட்டம் நரசிம்மர் ஆலய பரிபாலன சபையினரால் இந்தத் தூபி அமைக்கப்பட்டது. சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக எமது நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது தூபி இதுவாகும்.

மதத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மற்றும் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் பின்னர், நரசிம்மர் ஆலயத்தில் நடைபெற்ற மரணமானவர்களுடைய மோட்சதீபம் ஏற்றுதலிலும், அர்ச்சனையிலும் இவர்கள் கலந்து கொண்டனர். (ற)

## நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் வல்லமை எமக்கு உண்டு

### கேணல் சொர்ணம் தெரிவிப்பு

(திருகோணமலை)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய வல்லமை எங்கள் போராளிகளுக்கு உண்டு என தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், தம்மைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட்புறா ஹொவ்டேயிடம் தெரிவித்தார்.

வெள்ளம் மற்றும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் எமது மக்களுக்குச் சரியான முறையில் சென்றடைய வேண்டும் என்றும் கேணல் சொர்ணம் அவரிடம் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களை இராணுவம் நிர்வகிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவு குறித்து அதிருப்தி தெரிவித்த கேணல் சொர்ணம், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப்புலிகளின் போராளிகள படையினரால் துன்புறுத்தப்படுவதாகவும், கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் சுட்டிக் காட்டினார்.

இவரைத் தொடர்ந்து திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நலன்புரி நிலையங்களை இராணுவம் பொறுப்பேற்றமை கண்டிக்கத்தக்க விடயமாகும். தமிழ் அகதிகள் தங்கியிருந்த முகாம்களைத்தான படையினர் பொறுப்பேற்றுள்ளனர். ஏனைய இனங்களைச் சேர்ந்த அகதிகள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களை படையினா பொறுப்பேற்கவில்லை. உலகில் வேறு எங்கும் படையினர் அகதி முகாம்களை நிர்வகிப்பதாக எமக்குத் தெரியவில்லை என்றார்.

திருகோணமலை நகரில் அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளின் போது ஜே.வி.பியினர் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதை நினைவுபடுத்திய எழிலன், ஜே.வி.பியுடன் உறவை வைத்துள்ள ஜனாதிபதியால் சமாதான முயற்சியை முனனெடுக்க முடியாது எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது. (ற)

## சேதமடைந்த இந்து அமைப்புக்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன

சுனாமி - கடற்பேரலையினால் சேதமடைந்த இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள் மற்றும் இந்து சமய நூலகங்கள் என்பன தொடர்பான தகவல்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பாதிப்பிறகு உட்பட்ட மேற்படி அமைப்புகளுடன் தொடர்புடைய ஆலய நிர்வாகிகள், இந்துசமய நிறுவனப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர்கள் மற்றும் இந்துசமய நூலகங்களின் நூலகர்கள் ஆகியோர் சேதங்கள் தொடர்பான பூரண விபரங்களை அறிவித்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேறபடி விபரங்களை "பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248, 1/1, காலிவீதி, கொழும்பு -04" எனும் முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம் அல்லது மாவட்டச் செயலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும் கடமைபுரியும் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு இந்துசமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் கேட்டுள்ளார். (ற)

## மீளாய்வு செய்க!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேசத்தை சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் தமது மாதாந்த உதவிப் பணத்திற்கான படிவத்தைக் கொண்டுவந்து மீளாய்வு செய்யுமாறு தெல்லிப்பழை பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் ந.புரட்சிதாசன் அறிவித்துள்ளார். (ற-19)

## பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

கொழுத்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வழிபாடும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-51)

## உதவிகள் நேரடியாகக் கிடைக்க வேண்டுமென்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கை நியாயமானது

### மயோன் முஸ்தபா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கினை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகள் நேரடியாகக் கிடைக்கவேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கை நியாயமானது. தமிழ்- முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு வளர்ந்து வரும் இந்நிலையில் தமிழ்- முஸ்லிம் சக்திகள் இணைந்து ஒன்றாகப் பலமாக நிற்கவேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான், அமெரிக்க அமைசசர், நோர்வே அமைச்சர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் எவரும் கல்முனைப் பகுதியினை வந்து பார்வையிடவில்லை. இதற்கு காரணம், அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அமைச்சர்களின் பலவீனமே ஆகும்.

சுனாமிக்குப் பின்னர் தமிழ்-முஸ்லிம் உறவு வளர்ந்து வருகின்றது. எனவே, இவ்வேளையில் தமிழ்-முஸ்லிம் மக்கள் தனித் தனியாகப் பிரிந்துநிற்காது இரண்டு சக்திகளும் ஒன்றிணைந்து பலமாக நிற்கவேண்டும். அப்போதுதான் எதனையும் சாதிக்கமுடியும்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களுக்கு எலும்புத்துண்டைப் போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ள அரசாங்கம் முற்படலாம். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நீலாவணையில் இருந்து அக் கரைப்பற்று வரையுள்ள வயல் பகுதிகளில் குடியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்த வயல் பிரதேசங்கள், குடியிருப்பு நிலமாக பிரகடனப்படுத்தப்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 325 ரூபா பெறுமதியான நிவாரண முத்திரை வழங்கப்படுகின்றது. இத்தகைய முத்திரையினை வழங்குவதை நிறுத்தி அதற்கான பணத்தினை அரசு வழங்கவேண்டும். இல்லையேல் நிவாரண முத்திரையினை எந்தக் கடையிலும் கொடுத்து பொருட்களை வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொளளப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார். (ற)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

51

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்**

எனவே செண்பகப்பெருமாள் காலத்துக்குப் பின் யாழ்ப்பாணனின் யாழ்ப்பாணப் பெயர் வந்தாற்றான் யாப்பாநெயில் இருந்து வந்ததெனலாம்.

மதித்த வளங்கொள்வயல் செறி நல்லூரில் எனக் கைலாயமாலையிற் சொல்லப்படுவதால் ஊருக்கு நல்லூர் என்ற பெயரும் தேசத்துக்கு யாழ்ப்பாணம் என்னும் பெயரும் இக் குயிற்றா துக்கு முன்னரே இருப்பதால் இக்குயிற்றாதாலே தான் இப்பெயர் வந்ததென்பது பிழை.

"யாப்பாநெ" என்ற சிங்களச் சொல் யாழ்ப்பாணம் என வரவில்லை அதனை வைபவமாலை யார்மயங்கிக் கூறவும் இல்லை. கைலாயமாலை வைபவமாலைக்காதாரமான நூல் அக் கைலாயமாலையிற் சொல்லப்பட்டதையே அவர் சொன்னார் என்பதே.

அன்றியும் நல்லூரில் உள்ள தமிழ் மக்கள் தம் நாட்டு நல்லூர் என்னும் சொல்லைவிட்டு "யாப்பாநெ" என்னும் சிங்களச் சொல்லை சொன்னார்கள் என்றும் அதுவே காலகதியில் யாழ்ப்பாணம் எனும் பெயர் ஆனதென்பதும் அசம்பாவிதமே எனவே இந்த ஆறு நூற் றாண்டுக்கால எல்லையிலே யாழ்ப்பாணமென்னும் பெயர் சிங்கள நாட்டிலும் பரவி இருக்க வேண்டும். அதனை அறிந்துதான் அக்கோகில சந்தேசகாரர் தம் நூலிலே யாப்பா பட்டுன என் றும் குறித்தார் என்று தோன்றுகிறது. அது எங்ஙனமெனில் யாழ்ப்பாணம் என்பதில் உள்ள "ழ" என்னும் மெய் எழுத்து தமிழுக்கே சிறப்பெழுத்து. அந்த எழுத்து சிங்களத்தில் இல்லை. ஆகையால் சிங்கள மக்கள் அதனை ஒழித்து யாப்பாணம் என்று சொல்லவேண்டும் அதைத்தான் அவர்கள் யாப்பாநெ என்று சொல்லுகிறார்கள். எனவே அச் சந்தேசக்காரரும் யாழ்ப்பாணம் என்ற சொல்லைத்தான் அவ்வாறு சொன்னார் என்க. செண்பகப்பெருமாள் ஒரு தமிழ் நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற ஒரு சிங்கள மன்னன் அம் மன்னனைக் குறித்துப் பாடிய அவனுக்கனுப்பிய பாட்டிலே இந்த யாப்பாப் பட்டுன என்னும் சொல் உபயோகிக்கப்பட்ட தனால் அச் சொல் சூழ உள்ள தமிழ் நாட்டு மக்களின் புழக்கத்துக்குப் போவதெப்படி ஒரு நாட்டின் பெயரை அந்நாட்டின் வெளிநாட்டார் வேறு மொழியாளர் மொழிபெயர்த்தா வழங் குகிறார்கள். இல்லையே மொழிபெயர்த்தால் பெயர் மாறிப்போகுமே அன்றியும் இப்பொழுது சிங்களவர் யாப்பாநெ, யாப்பீனே என்று சொல்லுவது இந்த யாழ்ப்பாணம் என்ற பெயரைத் தானே. அவ்வாறுதான் பண்டுள்ள சிங்களவரும் யாழ்ப்பாணம் என்ற பெயரைத் தான் யாப் பாநெ, யாப்பாப்பட்டுன என்று சொன்னார் என்க.

## 43. இந்நூலில் புதிதாக வெளியாகும் உண்மைகளுள் அனேகம்

**யாழ்ப்பாணச் சரித்திரம் தமிழரசர் காலத்தில் இந்நூலாலேயே முதன்முதலாக வெளியாகும் உண்மைகளுள் அனேகம்.**

1. வல்லிபுரத்தில் சிங்கை நகரில்லை.
2. அங்கிருப்பது செங்கடக நகர்.
3. சிங்கை நகர் நல்லூரில் கட்டப்பட்டது.
4. அந்நகர்க்கு வைத்த இடுகுறிப்பெயர் சிங்கை.
5. சிங்கையாரியச் சக்கரவர்த்தியில் உள்ள சக்கரவர்த்திப் பட்டப்பெயர் பல தேசங்களை வென்றதனால் ஏற்பட்ட பட்டப் பெயரல்ல. முதலரசனுக்கு முடிசூட்டும் பொழுது அம் முடியைச் சூட்டிய கெங்காதரக் குருக்களால் கொடுக்கப்பட்ட உயர்வு நவிற்சி ஆசீர்வாதப் பட்டப்பெயர் இராசாவை உயர்த்திச் சக்கரவர்த்தி என்று சொன்னவாறு.
6. கலிங்கமாகனுக்கு யாழ்ப்பாணத்தில் தொடர்பில்லை.
7. கலிங்க மாகனும் சிங்கையாரியனும் வேறு வேறு புகுடர்கள்.
8. சிங்கையாரிய மன்னர் பரம்பரையைக் கலிங்கமாகன் பரம்பரையாகப் பிறர் அட்டவணைப் படுத்தியது பிழை.
9. கலிங்கமாகன் வல்லிபுரத்தில் சிங்கைநகர் கட்டவில்லை.
10. செண்யகப்பெருமாள் நல்லூர்த் தலைநகரைக் கட்டவில்லை.
11. நல்லூரில் ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகுப் பட்டத்தை அவன் பெறவில்லை.
12. சின்னமனத்தார் விருந்தைப் பாராட்டி செண்பகப்பெருமாள் பாடவில்லை.
13. இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபது எட்டு நூறும் எழுபதும் கொண்ட தொகையாகும் அது 1170 அல்ல அது.பிழையான பொருள்.
14. கி.பி.948 தொடங்கி கி.பி.1620ஆம் ஆண்டு வரை நல்லூர்த் தலைநகரம் இருந்தது அத்தலைநகர் இருந்த களம் ஒன்றேயொன்றுதான்.
15. ஒரு களத்தில் உள்ள தலைநகர்க்கு மூன்று பெயர்கள்.
16. யாழ்ப்பாணத்தில் தமிழரசு 8ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது.
17. நல்லூர்த்தலைநகரம் 10ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது. 13ஆம் நூற்றாண்டென்பது பிழை.
18. சின்னமனத்தார் அமைச்சர் புவனேகவாகுக்கே விருந்திட்டார்.
19. கைலாயமாலை நல்லூர் இராச்சிய மக்களுக்காகவே பாடப்பட்டது.
20. உக்கிரசிங்கன் தலைநகரைச் சிங்கை நகர்க்கு மாற்றவில்லை செங்கடக நகர்க்கே மாற்றினான்.
21. கைலாயமாலை கலிங்கமாகனைப் பாடவில்லை.
22. காலிங்க என்னும் சொல்லில் உள்ள கா, ல எழுத்துக்களின் விளக்கப் பிசகால் வைபவமாலை யார்கூழங்கையென்று சொல்லவில்லை. அப்படி சொல்லுவது கையொன்று கூழையானதால் என்றும் சொல்லியுள்ளார். அன்றியும் கூழங்கையன் காலம் 16ஆம் நூற்றாண்டு. காலிங்கன் 13ஆம் நூற்றாண்டு ஆகையால் காலிங்க மாகனைப் பற்றிய ஒரு சொல்லும் ஒரு குறிப்பும் கைலாயமாலையிற் பாடப் பெறவில்லை. அவன் கைலாயமாலை பாடிய மூன்று நூற்றாண்டின் பின் இறந்தவன், இவை அரிய ஆராய்ச்சி முடிபுகள்.
24. செண்பகப்பெருமாள் கனகசூரியனை எந்த இடத்தில் வென்றானோ அந்த இடத்திலே அவன் பிரதிநிதி தோற்றான். கனகசூரியன் வென்றான்.
25. ஆகையால் ஆதிச்சிங்கை ஆரியன் இட்ட நல்லூர்த் தலைநகர்க் களத்தில் தான் கனகசூரியனின் கால முன் பரம்பரையும் பின் பரம்பரையும் இருந்தது.
26. சிங்கையாரிய பரம்பரையினர் ஆட்சி ஆரம்ப அரசன் தொடங்கிக் சங்கிலி குமரன் வரையும் ஒரே இடத்தில் நல்லூரில்தான் இருந்தது. எனவே அத்தலைநகரம் கி.பி. 948 தொடங்கி 17ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை இருந்தது.
27. சிங்கையாரிய பரம்பரையினர் ஆதிச் சிங்கையாரியன் தொடக்கம் இறுதியரசனான சங்கிலிகுமரன் ஆட்சி முடிபுவரை நல்லூரில் ஒரே தலைநகர்க் களத்தில் இருந்துதான் ஆட்சி புரிந்தார்கள்.
28. சிங்கை ஆரிய பரம்பரை மன்னர் நல்லூரில்தான் தோன்றினர். அவர்கள் யாரும் வல்லிபுரத்துக்குப் போய் ஆட்சி செய்யவில்லை. அவர்கள் அங்கிருந்து நல்லூருக்கு வரவுமில்லை.

(தொடரும்)

# சுனாமி அனர்த்த விபரங்கள் பெற யாழ். செயலகத்தில் கருமபீடம்

**அஞ்சலி நிகழ்வில் யாழ்.அரச அதிபர்**

(யாழ்ப்பாணம்)

சுனாமியினால் மரணம் அடைந்தவர்களுக்காக யாழ்.செயகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நேற்று முன்தினம் அஞ்சலி நிகழ்வு நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அரச அதிகாரிகள் உட்பட பெருமளவு அரச உத்தியோகஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அனைத்து அரச உத்தியோகஸ்தர்களும் கறுப்புப்பட்டி அணிந்ததுடன் நண்பகல் 12.00மணிக்கு செயலக வாசலில் ஒன்றுகூடி சுடர் ஏற்றி சுனாமியினால் இறந்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் பல்வேறு பட்ட விபரங்களை அறிந்துகொள்வதற்காக யாழ். செயலகத்தில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட இருப்பதாகக் கூறினார்.

இவ் அலுவலகத்தில், சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்விபரங்கள், சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் போன்ற தரவுகளை வழங்குவதற்கு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் கருமங்களை இலகுவாக ஆற்றுவதற்கும் இவ் அலுவலகம் செயற்படும்.

மேலும் அரச உத்தியோகஸ்தர்கள் யாவரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்புவதற்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

(க-5)

# ஜனவரி 31இல் இருந்து பயண வழி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பாலம் திருத்தும் பணிகள் எதிர்வரும்31ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.


இதனால் வடபிராந்திய போக்குவரத்து சேவையின் யாழ். மற்றும் காரைநகர்ச் சாலை பஸ்களின் தென்மராட்சிக்கான சேவைப் பாதையில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

தென்மராட்சிக்கான யாழ்.சேவைகள், கச்சேரி, முத்திரைச்சந்தி, கோப்பாய், கைதடி வீதியூடாக இடம்பெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை இந்நடைமுறை அமுலில் இருக்குமென வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச)



தென்மராட்சி பிரதேச செயலக கைதடி தென்கிழக்கு மூர்த்தை யாவத்தை வீதி சமுர்த்தி அதிகார சபையின் நிதியீட்டத்தின் மூலம் மக்கள் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு அண்மையில் பாவனைக்காக திறந்து விடப்பட்டது. (படம்:எஸ்.ரி.விமலதாஸ்)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய தேவஸ்தானத்தில் தென்னிந்தியக் கலைஞர்களின் நாதவேள்வி இடம்பெற்றது. தேவஸ்தான நிர்வாகத்தர் க.சோமசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் தென்னிந்திய தவில் கலைஞர் ஜீ.முத்துக்குமாரசாமிக்கு கோப்பாய் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீ செல்வம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: காரைநகர் செய்தியாளர்)

# தெய்வத்தைத் துணையாகக் கொண்டால்

"தொல்லையோர் இருவர் தேடும் சோதியே! யாது செய்வேன்? தில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்? யான் படும் இன்னலை இறக்கவல்ல நீ வாராயானால் யாது செய்வேன்?"

"அறத்தனிச் செல்வி பாக!



நின்பால் அன்பிலேன் அடியேன் என்று வெறுத்திடின் வேறோர் துணையுமில்லை. நின் அடியான் தன்னை நிறுத்தினர் வெயிலின் என்றால் நின் புகழ்க்கு நேர்வதாமோ?"

என்று இவ்வாறு எல்லாம் தண்டனையை அனுபவித்துத் தரிக்க ஒண்ணாமல் தவித்து அண்டா பிரானை அழைத்துப் பரித வித்தா தொண்டர் தண்டமிழ் வாதவூரர்.

வாதவூரர் வாளா மனிதரா! பாண்டி நாட்டில் அரிமர்த்தன மன்னன் அரசவையில் முதன் மந்திரியார் அல்லவா!

பரம்பொருளின் பாதாரவிந்தங்களையே பற்றிக் கொண்ட பக்தரான முதலமைச்சருக்கு முறை பிறழாத் தண்டனை!! தண்டனைக்குரிய காணரம் இது.

அரிமர்த்தன பாண்டியன் அமைச்சரிடத்தில் நாற்பத்தொன்பது கோடி பொன்னை எண்ணிக் கொடுததான். சோழநாட்டின் கடற்கரையில் இறககப்படும் ஆரியதேசத்துப் போர்க் குதிரைகளை விலை பொருந்த வாங்கிவரும்படி மன்னவன் மந்திரியாரை அனுப்பிவைத்தான்.

திருவாதவூரர் திருப்பெருந்துறையில் பரமாச்சாரியாரைப் பார்த்தார், தம்வசம் தவறினார் வாதவூரர். ஞானகுருவின் ஞானாமிர்தத்தைச் செவிமடுத்தார். உடல், பொருள்,ஆவியோடு, அரச

## வெள்ளிநற்சிந்தனை

னுடைய அரும்பொருளையும் குருவின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பணம் செய்தார். பரமாச்சாரியருடைய சரணகமலாலயத்தில் தஞ்சம் புகுந்தார்.

கோடி பொன்னோடு குதிரை வாங்கச் சென்ற மந்திரியார் கோவணம் வாங்கிக் கொண்டார்.

செய்தியைக் கேள்விப்பட்ட மன்னன் மந்திரியாரை மன்னிப்பானா?

## தீங்கு அணையாது

தண்டலாளரையும் தண்டமிழ் வள்ளலாரையும் அழைத்தான் அரிமர்த்தன பாண்டியன்.

மந்திரியாருக்குத் தண்டனை கொடுத்து நாற்பத்தொன்பது கோடி பொன்னில் ஒரு மாவும் குறையாமல் வாங்குமின் என்று தண்டலாளருக்கு அரசன் ஆணை பிறப்பித்தான்.

தண்டலாளர் முதன் மந்திரியாரைக் கூட்டிச் சென்றார்கள். சுடுமணலில் வட்டவடிவமாக வரையப்பெற்ற கோட்டில் மந்திரியாரை நிற்கச் செய்தார்கள். சூரியனைப் பார்க்கும் படி கூறி நெற்றியில் கல் ஏற்றினார்கள். அரசர் கொடுத்த கோடி பொன்னைக்குறைவறத் தரும்படி தண்டனை கொடுத்தார்கள்.

திருவாதவூரருடைய பாதங்கள் சுடுமணல் மீது, கண்களில் சூரியனுடைய கதிர்வீச்சு, நெற்றியில் கலபாரம், உச்சியிலும் உடம்பிலும் சூரிய ஒளி வெப்பம் வாதவூரர் இளைத்தார்.

தண்டனையைத் தாங்கொணாது தத்தளிக்கும் மணிவாசகப் பெருமான் தாம் துணைக் கொண்ட தெய்வத்திற்கு தெரிவித்த முறையீட்டை முன்னர் கேட்டோம்.

அடியானை அணைந்த அல்லலை அறிந்து அகற்றாது இருப்பாரோ பரம் பொதித்த புண்ணியனார். அக்கணமே கங்கையை ஏவினார் கண்ணுதலார்.

கங்கா நதி அடியாருடைய வெம்மைக்கு மருந்தாகத் தண்மை செய்ய வைகையூடு கடலாகிப் பெருகியது. அடியாருக்குத் தீங்கு அணையாது துணை நின்றது திருவருள் வெள்ளம்.

**அன்றே என்றன் ஆவியும்**
**உடலும் உடைமை என்னை ஆட்**
**கொண்ட போதே கொண்டி**
**லையோ**
**இன்றோர் இடையூறெனக்**
**குண்டோ**
**எண்தோள் முக்கண் எம்**
**மானே**
**நன்றே செய்வாய் பிழை**
**செய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே**

என்பது திருவாசகம்.

சிவ சண்முகவடிவேல்

# மக்களை மீளக்குடியமர்த்த உதவுமாறு உதவும் நாடுகளிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிகமாக மீளக் குடியமர்த்த சுமார் 35 ஆயிரம் கூடாரங்கள் உடனடியாகத் தேவைப்படுவதாக உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதி களிடம் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளிடமும் கூடாரங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தேசிய நடவடிக்கை நிலையத்தின் பணிப்பாளரான கலாநிதி தாரா டிமெல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தப் பாதிப்பையடுத்து நிவாரணப் பணிகளிலும், உதவி வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகளுக்கான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இவ் விசேட கூட்டத்தின் போதே கலாநிதி தாராடி மெல் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகல நிறுவ்னங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தின் போது பாதிப்புக்கள் தொடர்பான தற்போதைய புதிய நிலைவரங்கள், உணவு விநியோகத் தேவைகள் தொடர்பான விடயங்கள் மற்றும் உள்ஞூரில் இடம் பெயர்ந்தோர்களின் விபரங்கள், மீளக்குடியமர்த்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களை தமது சொந்தக் காணியில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக தேசிய நடவடிக்கை நிலையம் மாதிரித் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

இது தொடர்பாக அந்நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரைவாசி பாதிக்கப்பட்ட வீடுகள் உள்ளவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 200 அமெரிக்க டொலர் வீதம் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் முழுமையாக சேதமடைந்த குடும்பமொன்றுக்கு முதற்கட்ட உதவியாக 200 அமெரிக்க டொலரும், நிரந்தர நிர்மாணத்திற்கான நிதியுதவியாக 300 அமெரிக்க டொலர் வீதம் 40 ஆயிரம் குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

உறவினர்களின் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருக்கும் குடும்பத்தினர்களுக்கு. சுவிஸ் அரசின் உதவியுடன் குடும்பமொன்றுக்கு 200 அமெரிக்க டொலர் வீதம் 10 ஆயிரம் குடும்பங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளன.

இவைதவிர பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குத் தேவையான சத்துணவுகளும் உதவும் நாடுகளினால் அனுப்பப்படவுள்ளது.

உலக உணவுத் திட்டம் யுனிசெவ ஆகியவற்றுடன் இணைந்து இச் சத்துணவுகள் வழங்கப்படவுள்ளன. (க-9)

# கிணறுகளைச் சுத்தம் செய்ய த.பொ.மே. நிறுவனம் உதவி

(மருதங்கேணி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் கடல் நீர் உட்புகுந்த கிணறுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் வடமராட்சி கிழக்கு மீனவர்களின் சமாசம் துப்புரவு செய்து வருகின்றது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் கற்கோவளம், பொற்பதி, இன்பருட்டிப் பகுதிகளிலும் கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டுவருகிறது. (ப-35)

# ஜேர்மன் வைத்தியர்கள் குழு மந்திகையில் வைத்திய சேவை

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்காக ஜேர்மன் நாட்டை சேர்ந்த 11 பேர் கொண்ட வைத்தியக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மந்திகை வைத்தியசாலைக்கு வருகைதந்து தமது சேவையை ஆரம்பிக்குள்ளனர்.

இதேநேரத்தில் கடந்த 10 தினங்களாக மந்திகை அரசினர் வைத்தியசாலையிலும் நலன்புரி நிலையங்களிலும் சேவையாற்றிய அமெரிக்க வைத்தியக்குழு ஜேர்மன் நாட்டு வைத்தியக் குழுவிடம் வைத்திய சேவையை ஒப்படைத்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளது.

(ப-35)

## வெளியீடு

"சுவாசம்" என்னும் கவிதை நூல் கடந்த 24ஆம் திகதி அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இ.வசீகரன் எழுதிய இந்நூலின வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கலந்து கொண்டார்.

(ப-51)

# வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுனாமி அலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

இதன் பணிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது. முழுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமம் ஒன்றுக்கு 5 மில்லியன் ரூபாவும் குறைந்த அளவிலான பாதிப்புக்குள்ளான கிராமம் ஒன்றிற்கு 2 மில்லியன் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதற்கிணங்க திருகோணமலை மாவட்டத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட 57 கிராமங்களில் 31 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கடலோரக் கிராம அபிவிருத்தி அமைப்பின் உதவிப் பணிப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (க-9)

# இளம் பெண் மீது விசாரணை குயிலின்பன் கண்டனம் தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று நலன்புரிமுகாம் ஒன்றில் இருந்த இளம் பெண் ஒருவரை, இரவு நேரத்தில் பொலிஸார் விசாரணைக்கு என அழைத்துச் சென்றதை அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கண்டித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.30மணிக்கு குறிப்பிட்ட முகாமிற்குள் நுழைந்த அதிரடிப் படையினரும் பொலிஸாரும் அங்கிருந்த இளம் பெண்ணையும் இளம் குடும்பஸ்தர் ஒருவரையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இரவு நேரங்களில் மக்களை விசாரணைக்கு அழைப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்துடன் எமது போராளிகள் இருவரையும் அதிரடிப்படையினர் அண்மையில் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இது குறித்து நாம் கண்காணிப்புக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளோம் என்றார். (க)

# ஆயுர்வேத வைத்தியசாலை பாஷையூரில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை இன்றுமுற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மாநகரசபையினால் புதிதாகப் புனருத்தாரணம் செய்யப்பட்ட பாசையூர் மகப்பேற்று நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அன்று யாழ்.மாநகரசபையின் மகப்பேற்று மருத்துவ நிலையமும் தனது பணிகளை அக்கட்டடத்தில் தொடங்கவுள்ளது. இந்த மகப்பேற்று நிலையமும் சித்த வைத்தியசாலையும் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலா நிதி க.குணராசாவால் திறந்துவைக்கப்படும்.

இதேவேளை, கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் இயங்குகின்ற மகப்பேற்று மருத்துவ நிலையத்தில் கொழும்புத்துறைக்கு உரிய இலவச சித்த வைத்தியசாலை மாநகரசபையால் கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த இரு வைத்தியசாலைகளிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவத்துறையிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய வைத்தியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். (ப்)

# தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தற்காலிகமாக இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் உள்ள தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலை அதே இடத்தில் உள்ள போரூட்டிற்கு சொந்தமான கட்டடத்திலும் வை.எம்.சி.ஏ.கட்டடத்திலும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தற்காலிகமாக இயங்கிவருகிறது.

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதனாலேயே இப்பாடசாலை தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி கடந்த வியாழன் தொடக்கம் மீள இயங்க ஆரம்பித்துள்ளது. இங்கிருந்த இடம் பெயர்ந்தோர் இப்பாடசாலையின் பின்புறத்தில் உள்ள வேறு கட்டடத் தொகுதியில் தங்கியுள்ளனர்.

(ப-52)

# கிரிமினல்களைக் கண்டறிய இலண்டனில் விஷேட பிரிவு


(இலண்டன்)

இலண்டனில் உள்ள தமிழர்களின் குற்றங்களைக் கண்டறிய "ஒப்பரேசன் என்வர்" என்ற விசேட பொலிஸ் அதிரடிப்படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் சந்தேகத்திற்கிடமான வீடுகள், நகரங்கள், கூட்டங்களில் திடீரென்று உட்புகுந்து தேடுதல்களை நடாத்துவார்கள் எனவும் தெரியவருகிறது.

இலண்டனில் வாழ்ந்து வரும் ஒரு இலட்சம் தமிழ் மக்களின் நடவடிக்கைகளை இந்த விசேட பிரிவினர் கண்காணித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படைப்பிரிவிற்கு கொமாண்டர் அல்பேட் கிக்கோக் தலைமை தாங்குகிறார். அண்மையில் இவர்கள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது சட்டரீதியற்ற வியாபாரங்கள் கஞ்சா வியாபாரம் கசிப்புக் காய்ச்சுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டபலர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நிலா




நினைவு தெரிந்த நாளிலிருந்து அவளுக்கென்று ஒரு பெயர் இருந்ததே தவிர, யாரும் பெயர் சொல்லி அழைத்ததாய் அவளுக்கு ஞாபகமில்லை. எல்லோரும் 'ஏய் நொண்டி' என்று அழைப்பதும் அதற்குத் திரும்பிப் பார்ப்பதும் அவளுக்கு வழக்கமாகி விட்டது.

மனசிருக்கும் வேளைகளில் அம்மா எப்பொழுதாவது பெயர் சொல்லி அழைப்பாள். 'நிலா' என்ற அந்தப் பெயர் அவளுக்கு மிகவும் பிடிக்கும். தன்னைத்தானே திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பாள். அழகாய் ஒரு பெயரை வைத்துவிட்டு ஏன் இப்படி 'நொண்டி' என்று அழைத்து மனசை ஊனப்படுத்துகிறார்கள் என்று புரியவில்லை:

தன் பெயரையே இல்லாமல் போக்கடித்த தன் ஊனத்தைப் பார்த்துக்கொண்டால் நிலா. முழங்காலுக்குக் கீழே எதுவும் இல்லாமல் வெறும் காலில்லாத பொம்மை மாதிரி உடம்பே அத்துடன் முடிந்த விட்டமாதிரி....

கால்கள் இல்லாமல் தரையை தேய்த்துத் தேய்த்து வெறும் புழு மாதிரி ஊர்ந்து போகும் அவலம். அவ்வப்போது தன் கால்களை இல்லாமல் நோகடித்ததற்காக அவள் கடவுளையும் கோபித்துக் கொள்வாள்.

நான்கு வயது வரை எல்லோரையும் போல் அவளுக்கும் கால் இருந்ததாக அம்மா சொல்வாள். பாடசாலை முடிந்து தெருவில் வரும்போது வேகமாய் வந்த ஒரு வான் இவள் கால்கள் இரண்டையும் ஊனமாக்கி விட்டுப் பறந்தோடி விட்டதாம். அம்மா மற்றவர்களுடன் கதைக்கும்போது இதைச் சொல்லியிருக்கிறாள். அப்படி அவள் சொல்லும்போது நிலாவுக்கு அழுகை வந்தது.

நான்கு வயது வரை கால்களுடன் விளையாடியது எதுவும் அவளின் ஞாபகத்தில் இல்லை. அதைப்பற்றி திரும்பத் திரும்ப அம்மாவிடம் கேட்பாள். 'அம்மா போடி போய் உன் வேலையைப் பார்' என்று சலிக்கப் பேசுவாள்.

அந்தச் சின்னக் குடிசையின் முன்னால் உள்ள மரத்தடியில் உட்கார்ந்து கொண்டால் உலகத்தின் விதம் விதமான கால்கள் முழுவதும் அவளின் கண்களில் விரியும்.

கறுப்பும் வெளுப்பும் நிறத்திலுமாய், செருப்புப் போட்டுக் கொண்டும், போடாமலும்,செருப்புப் பிய்யப்போகும் நிலையிலும் நிறையப் பேர் அந்தக் குடிசையைக் கடந்து செல்வார்கள்.

பக்கத்து வீட்டு கந்தசுவாமித் தாத்தா தனது மகனின் கடைக்குப் போகையில் தவறாமல் தினமும் இவளைப் பார்த்து புன்சிரிப்பை உதிர்த்து விட்டுத்தான் போவார். பேப்பர் விற்கும் சிறுவன் ஏனோ இவளைப் பரிதாபமாய்ப் பார்ப்பது போலத் தோன்றும். வீட்டின் எதிரே உள்ள மைதானத்தில் மாலை நேரங்களில் சின்னஞ் சிறிய சிறுவர்களின் விளையாட்டு இவளுக்கு நித்திய திருவிழா மாதிரித்தான்.

'ஏய் விடடா, போய் பந்தைப் பிடியடா...' என்று கூச்சலிட்டபடி அங்கும் இங்கும் உற்சாகத்துடன் பந்து விளையாடும் சிறுவர்களை வெறித்துப் பார்ப்பாள் நிலா. வெள்ளை நிறப் பந்து மேலும் கீழுமாய் துள்ளிப் போவதைப் பார்க்கையில் நிலாவுக்கு அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என ஆசையாய் இருக்கும். தானும் அவர்களுள் ஒருவராய் மாறிவிடமாட்டோமோ என்று ஏக்கம் பிறக்கும். தினமும் காலையில் எழுந்தவுடன் வெள்ளைச் சட்டையை வெறித்துப் பார்ப்பாள் நிலா.

நிலாவின் உலகம் அந்தக் குடிசையின் வாசலிலிருந்து அந்த மரத்தடியோடு முடிந்து விட்டிருந்தது. அம்மா காலையில் எழுந்து யார் தோட்டத்திலோ வேலை செய்யப் போய்விட, அப்பா வீட்டில் இருப்பதே பாதி நாட்கள் தான். வீட்டில் இருக்கும் நாட்களில் சதா திட்டுக்களாய் உதிர்த்தவண்ணம் இருப்பார். அவர் காசு கொடுக்கவில்லை என அம்மா சண்டைபோட அவரும் பெரிதாய்க் கத்த' உடுப்பை மாட்டிக்கொண்டு வெளியே போய்விடுவார்.

இரண்டு அண்ணாக்களும் எங்கேயாவது ஊர் சுற்றிக் கொண்டிருப்பார்கள். முதல் அண்ணன் நந்தனுக்கு ரொம்பவும் கெட்ட பழக்கவழக்கங்கள் இருப்பதாய் அம்மா சொல்வாள். இரண்டாவது அண்ணன் முரளி இவர்கள் முன்னாலேயே சிகரெட் பிடிப்பான். அக்கா மட்டும் தான் அன்பு என்றால் என்னவென்று இவளுக்கு உணர்த்தியவள்.

அம்மா அவ்வப்போது தோட்டத்திலிருந்து புகையிலைக் கன்றுக்கு பாதுகாப்புக்காக போடுவதற்கு வைக்கோலைக் கொண்டு வந்து இவள் முன்னால் போடுவாள். நிலா பகல் முழுவதும் வாசலில் இருந்தவாறே கைகள் வலிக்க வலிக்க வளையமாகக் கட்டிக்கொடுப்பாள். சந்தோஷமாய் இருக்கும் நேரங்களில் அம்மா இவளுக்கு ஒரு ரூபாயும் ஐந்து ரூபாயுமாய்க் கொடுப்பாள். அதை தான் படுக்கும் கட்டிலின் அடியில் உள்ள மரப்பெட்டியில் போட்டு வைத்திருப்பாள். அதைத் தினமும் ஒரு முறையேனும் எடுத்துப் பார்த்துக் கொள்வாள்.

குருவி மாதிரி கஷ்ரப்பட்டுச் சேர்த்து வைத்திருக்கும் பணத்தை பருந்துமாதிரி வந்து கவ்விக்கொண்டு போய் விடுவான் மூத்த அண்ணன். இவள் கண் எதிரிலேயே பணத்தை அவன் எடுத்துக்கொண்டு போகும் போது நிலா முகம் சிவக்க, அழுகையுடன் பார்த்துக் கொண்டிருப்பாள்.

'வேண்டாம் அண்ணா, எடுக்காதை அண்ணா' என்று துடித்துப் போய் இவள் கத்தினால் 'போ நொண்டி' என்று முகம் கடுகடுப்பாகவே சொல்ல அந்த நொண்டி என்ற சொல் அவளின் ஊனத்தை விட அதிகமாய் அவளை வேதனைப்பட வைத்தது. கண்களில் இருந்து கண்ணீர் கசிய அடுப்புப் புகையை ஊதிக் கொண்டிருக்கும் அம்மாவிடம் இவள் அண்ணனைப் பற்றிச் சொன்னால் இயலாமையாலும், ஆத்திரத்தினாலும் அவள சட்டென்று இவள் மேல் ஆத்திரப்பட்டு பேசுவாள்.

'போய்த் தொலையண்டீ சனியனே' என்பாள. 'எங்கே போய்த்தொலைவது' என்று நிலா நினைத்துக் கொள்வாள். அவர்களின் உறவினர்களுக்கு திருமணம் நடக்கும்போது அம்மா தன்னிடம் இருக்கும் ஒரே பட்டுப்புடவையைக் கட்டிக்கொண்டு கிளம்ப வீட்டினரும் கூடவே செல்ல நிலாவின் மனசு முழுவதும் துக்கம் குடிகொள்ள வாய்விட்டுக் கேட்டிருக்கிறாள்.

'என்க்கும் ஆசையாய் இருக்கம்மா என்னையும் கூட்டிக் கொண்டு போம்மா' அம்மா இவளைப் பார்க்காமல் வேறு எங்கேயாவது முகத்தைத் திருப்பி பதில் கூறுவாள்.

'அங்க ஆயிரம் பேர் வந்து போற இடம். உன்னைச சுட்டிக்காட்டி அதுவும் உன் ஊனத்தைக் காட்டிப் பேசுவார்கள். உனக்கு சரிப்பட்டுவராது'.

'இதுக்கெல்லாம் எதுக்கடி ஆசைப்படுகிறாய்?' என்று அண்ணா கேலியாய் கேட்க, அக்கா மட்டும் வழக்கம் போல இவளை ஆதரவாய்ப் பார்ப்பாள்.

ஆனாலும் என்றைக்கோ ஒருநாள் கூட்டிக் கொண்டு போக மாட்டார்களா என்ற நப்பாசையில் ஒவ்வொரு தடவையும் நிலா கெஞ்சிக்கேட்க, பதிலுக்கு மனம் நோகடிக்கப்பட்டிருக்கிறாள். அக்கா பின்னால் நின்று இவள் தலையை ஆதரவாகத் தடவிக் கொடுப்பாள்.

அக்காவுக்கு இருபத்தியேழு வயது முடிந்தும் பணம் இல்லாமையால் திருமணம் பற்றிப் பேசவேயில்லை. அக்கா அருகில் இருக்கும் தையல் கடையில் தைக்கும் வேலை செய்கிறாள். காலை நேரத்தில் பழைய சோறு சாப்பிட்டுப் போனால் மாலை ஆறு மணிக்குத்தான் வீடு வருவாள். அவளைக் கல்யாணம் செய்துவைக்க முடியாத இயலாமையை அவளிடமே காட்டி ஆத்திரத்துடன் புலம்ப முயல்வாள் அம்மா.

'ஏணி மாதிரி வயது ஏறுது. இவா புகுந்தவீடு போய்ச சேர்ந்தால் தான் நிம்மதி' என்பாள். இராத்திரியில் வெறும் பாயில் முகம் புதைத்து அக்கா அழுவதைப் பார்க்க நிலாவுக்கு அழுகை வரும்.

'நிலா!' என்று பாசம் பொங்க அழைக்கும் அக்காவை நிலா சூரியனைப் பார்ப்பது போல கண்கள் கூசப் பார்ப்பாள்.

சில சமயங்களில் இரவு தூங்கும் போது நிலாவுக்கு கனவு வரும். நிலா தனது பொம்மைக் கால்களைப் பார்த்துக்கொண்டிருக்க வானத்திலிருந்து உமாதேவியார் அருட்பார்வை பார்க்க நிலாவுக்கு கால் முளைத்து அங்கும் இங்கும் ஓடுகிறாள். எல்லாப் பிள்ளைகளையும் போல் இவளும் பாடசாலைக்குப் போகிறாள்.

அன்றும் அப்படித்தான் காலையில் இதேமாதிரி கனவு கண்டு இவள் விழித்துக்கொள்ள அப்பாவும் அம்மாவும் இவளருகில் இருந்தார்கள். ஏதோ மூன்று நான்கு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். இருபது நாட்கள் இப்படியே நகர்ந்து போக,

அன்று அம்மா எங்கேயோ போய் வந்தவள் மிகவும் சந்தோஷமாய் இருந்தாள். முதன் முதலாக இவள் அருகே அமர்ந்து நிதானமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். கதை கேட்பது மாதிரி 'ம்' என்று தலையாட்டிக் கொண்டிருந்தாள் நிலா.

பதினாறு வருடங்களுக்கு முன் இவள் கால்களைப் பறித்துக்கொண்டு போய்விட்ட வான் உரிமையாளர் அப்போதைய வைத்திய செலவைத் தவிர்த்து மொத்தமாக ஒரு தொகையை அவள் மேஜரான பிறகு கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டதாம். அதன்படி அவர்கள் காப்புறுதியில் இவள் பெயரில் போட்ட பணம் இப்பொழுது ஒரு லட்சமாய் பெருகி நிற்க, வெறும் நொண்டியான நிலா இப்பொழுது பெரிய பணத்திற்கு சொந்தக்காரியாகிவிட்டாள்.

போனகிழமை தான் நிலாவுக்கு பதினெட்டு வயது பூர்த்தியாகி இருக்கிறது. அடுத்தமாதம் நீதிமன்றத்தில் வைத்து இவளிடம் பத்திரத்தை [illegible] சேர்ப்பிக்கப் போகிறார்களாம். திகைத்துப்போய் நம்பவே முடியாமல் ஆச்சரியத்துடன் அம்மாவை நோக்கினாள நிலா.

முகத்தில் சுருக்கங்களுடன், தலையில் வெள்ளை மயிர் பளிச்சிட அக்கா அவள் கண்முன்னே வந்துநின்றாள். அம்மா கொண்டுவந்து வைத்த சாப்பாடு பிடிக்கவில்லை. யோசித்துப் பார்த்தபின் அம்மாவைக் கூப்பிட்டு 'அந்தப் பணத்தில் அக்காவுக்கு திருமணம் செய்து வைக்கலாம்' என அவள் சொல்ல, அம்மா உடனே அவளைக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தாள்.

வீடே கல்யாண சந்தோஷத்தில் திளைத்திருந்தது. அப்பாவின் உறவினர்கள், அம்மாவின் உறவினர்கள் வந்து சேர அவர்களது தூரத்து உறவான கஜனை பேசி முடிவு பண்ணலாம் என்று அவர்கள் கூற வீடு முழுவதும் சந்தோசத்தில் மலர்ந்து விட்டதைப் போல தோன்றியது நிலாவுக்கு.

(..[illegible]. ஆம் பக்கம் பார்க்க)

இ.தர்ஷா,
கோண்டாவில்.

# குறியீட்டு இடைவினைகளும் சமூக உளவியலும்

2

(தொடர்ச்சி...)

இந்நிலையிலே வெளியீடு தொடர்பான பல்வேறு மாற்றுவழி'களையும் சொல்பவர் கருத்திலே கொள்வதுண்டு. இந்த அகவயமான நிலை தமது நோக்கத்தையும், பிறரது நோக்கத்தையும் கருத்திலே கொண்டு மேற்கொள்ளபபடுகின்றது. இந்நிலையில் வெளிப்படுத்துகை தடைப்படலாம்.

இந்தத் தடைப்படலின் உள்ளார்த்தமாக மாற்றுச் சிந்தனைகள தொழிற்பட்டுக்கொண்டிருக்கும். இந்நிலையில் ஒருவர் பகுத்தறிவு பூாவமாக நடந்து கொள்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை.

தடங்கல் ஏறபடும்போது முன்னர் ஒரு சந்தர்ப்பத்திலே பயன்படுத்திய துலங்கலை பின்னர் நிகழும் அதே சந்தர்ப்பத்தில் பயன்படுத்துதல் உண்டு. இது சில சமயங்களிலே சந்தர்ப்ப பொருத்தமற்றதாகியும் விடும்.

இவ்வாறாக மனத்திலே தரித்துவைப்பதும், மாற்றுவழிகளைச் சிந்தித்தலும், துலங்குதலும் குறியீடுகளின் கையாள்கை (Manipulation) எனபபடும். இதன் வழியாகவே குறியீட்டு இடைவினை நிகழ்த்தபபடுகின்றது.

ஒவ்வொரு பொருள் பற்றியும், ஒவ்வொரு சம்பவம் பற்றியும் ஒவ்வொருவரும் கொள்ளும் புலக்காட்சிக்கு ஏற்றவாறு அருவ நிலையான குறியீடுகளின் கையாளுகையும் வெளிபபடுத்தலும் வேறுபடும். இந்நிலையில் ஒருவரது சமூக வாழ்வுக்கும், சமூக உணர்வுக்கும், சமூக நோக்குக்கும் ஏற்ப குறியீட்டு இடைவினைகள் நிகழும் என்பதைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

புறத்தே இருக்கிற ஏதாவது ஒரு பொருளிலும் பார்க்க ஒருவர் தம்மைப் பற்றிக்கொள்ளுகின்ற சுய எண்ணக்கருவே சுய உணர்வுத் தெறிப்புமிக்கதாகப் பொதுவாக அமையும். தமது சுய எண்ணக்கருவின் பொருட்டுப் பிற விடயங்களைத் தியாகம் செய்பவரும் உளர்.

பிறருடன் இடைவினை கொள்வதன் வாயிலாகவே சுய எண்ணைக்கருவாக்கம் நிகழ்கின்றது **(Mead, 1934p.135).** 'தாம யார்?' என்பதிலிருந்து சுய எண்ணக்கரு மலர்ச்சியுறத்தொடங்குகின்றது. நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூகத் தொடர்புகள் சுய எண்ணக்கருவாக்கத்துக்குத் துணைநிற்கின்றன.

நான் என்பதற்கும் **(I)** எனக்கு **(me)** என்பதற்குமிடையே வேறுபாடுகள் சுட்டப்படுகின்றன. நான் எனபது தெறப்புக்குள்ளாகாத **(Nonreflective)** சுயத்தைக் குறிப்பிடுகின்றது. கடந்த காலத்தையோ இனி நிகழ இருப்பவற்றையோ 'நான்' கருத்திலே கொள்வதில்லை. அவ்வப்போது உடனடியாக எழும் தூண்டிகளுக்குத் துலங்குதலே 'நான்' ஆகின்றது **(Mead, 1936p.173).**

நான் என்பது எனக்கு என்பதும் ஒன்றின்மீது மற்றையது சார்ந்ததும் இடைத்தாக்கம் புரிந்தும் இயக்கம் கொள்கின்றன.

குழந்தைப் பருவத்தில் குடும்பத் தொடர்புகளால் சுய எண்ணக்கரு ஆக்கம் பெறுகின்றது. மற்றவர்களுடைய பாத்திரததைத் தாமே நடிக்கும் முதலாவதாக நிகழும் சுய எண்ணக்கருவாக்கப் பருவம் 'விளையாட்டுப் பருவம்' **(play stage)** எனப்படும். இதிலிருந்து மேலும் சிக்கலான குறியீட்டு இடைவினைகளை அனுபவிக்கும்பொழுது சுய எண்ணக்கரு மேலும் விரிவான ஆக்கத்தைப் பெறுகின்றது.

இந்நிலையில் இரண்டாவது வளர்ச்சிக் காலகட்டமாகய வென்றிடும் ஆட்டப்பருவம் **(Game stage)** மேலெழத் தொடங்குகின்றது. முன்னரிலும் உயர் நிலையானதும், சிக்கல் மிக்கதுமான தொடர்புகள் இப் பருவத்தில் ஏறபடுகின்றன.

பொதுவான சமூகப் பாத்திரங்களை ஏற்பதனாலும் அப்பாத்திரங்களை அடியொற்றிய குறியீட்டு இடைவினைகளைப் புரிவதாலும் எழும் உணர்வுகள் சுய எண்ணக்கருவாக்கத்திலே மேலும் பங்கு கொள்கின்றன. இதிலிருந்து சுய எண்ணக்கருவாக்கம் தொடர்பான மூன்றாவது காலகட்டம் வளர்ச்சியடைகின்றது.

இந்த மூன்றாவது காலகட்டம் 'மற்றவர்களைப் பொதுமைப்படுத்தும் பருவம்' **(Generalized stage)** எனப்படும். பொதுமையாக்கபபட்ட சமூகத்தின் பாத்திரங்களை ஏற்றலும், இடைவினை, கொள்ளலும அதன வழியாக சுய எண்ணக்கருவை வளர்த்தலும் இப்பருவத்திலே சிறப்பிடம் பெறும்.

பல்வேறு சமூகப் பாத்திரங்களை ஏற்றல் சமூக ஒழுங்கமைப்புக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. குறியீட்டுத் தொடர்பாடல் செயன்முறையின் வாயிலாக பாத்திரம் ஏற்றல், தொழிற்படுதல், மனவெழுச்சிகொள்ளல், மனப்பாங்கு எய்துதல் முதலியவை அகவயமாகவும் புறவயமாகவும் நிகழ்கின்றன.

குறியீட்டு இடைவினையியல் தொடர்பான சிந்தனை வளர்ச்சியில் சார்ல்ஸ் ஹோட்டன் கூலி மற்றும் வில்லியம் ஐ.தோமஸ் ஆகியோர் குறபபடத்தக்கவர்கள். தனி மனிதரைக் குவியபபடுத்திய சமூக உளவியலின் வளர்ச்சிக்கு இவர்களின் பங்கு முக்கியமானதாகும்.

ஒருவரது ஆளுமை இயல்பு மற்றும் சுய எண்ணக்கருவாக்கம் முதலியவை குறியீட்டு நிலைத் தொடர்பாடல் வழியாகத் திரண்டெழுந்த சமூகப் பேற்றினால் உருவாக்கம் பெற்றதென்பது கூலியின் கருத்தாகும் **(Cooley, 1964,P.3-50).** சமூகத் தொடர்பு ஒவ்வொன்றும் அகத்திலே தெறித்து சுய எண்ணக்கருவாக்கத்துக்கு இட்டுச் செல்கின்றது.

சில இடைவினைகள் சரியானதும் பொருத்தமானதுமான தெறிப்பை ஏற்படுத்துகின்றன. சில இடைவினைகள் பொருத்தமற்ற தெறிப்பை வழங்குகின்றன. இவை கண்ணாடிப் பிரதிபலிப்பின் வழியான சுய எண்ணக்கருவாக்கம் என்றவாறு கூலியால் பெயா சூட்டப்பட்டது.

தம்மையும் பிறரையும் தொடர்புடுத்தி நாங்கள் **(We)** என்று கூறுதல் ஒருவரது முதல் நிலைக் குழுவின் தொடர்பாடல் வழியாக உருவாக்கம் பெற்றுவிடுகின்றது. முதல் நிலைக் குழுவே **(primary group)** பொய சமூக நிறுவனக் கட்டுமானத்துக்கு ஆதாரமானது என்பது கூலியின் கருத்து.

குறியீட்டு இடைவினை தொடர்பான கருத்துக்களை மேலும் முன்மொழிந்த தோமஸ் என்பவர் சந்தர்பப பகுபபாய்வு **(Situational analysis)** மீது ஆழ்ந்த கவனம் செலுத்தினர். மனித நடத்தைகளை சூழலின் தூணடிக்குரிய துலங்கலால் மட்டும் விளக்கமுடியாதென்று கூறிய தோமஸ் தூண்டிக்கும் துலங்கலுக்குமிடையே நிகழும் அக நிலைப்பட்ட வரைவிலக்கணத்தினால் மட்டுமே புரிந்து கொள்ள முடியுமென்று கருதினார். ஒரே தூண்டி பல்வேறு மனிதர்களிடத்தும் பல்வேறு துலங்கலை ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் ஒவ்வொருவருக்குமுரிய அகவயமான வரைவிலகணம் முக்கியத்துவம் பெறுகினறது. சுய நெறிப்பட்ட எந்தவொரு நடத்தையையும் பகுத்து ஆராய்ந்து பரிசீலனை செய்யக்கூடிய நிலையே சந்தர்ப்பப் பகுப்பாய்வு ஆகின்றது **(Thomas, 1972,p.41-43)**

சமூகமயமாக்கற் செயலமுறையின்போது ஒவ்வொருவரும் தாம் எதிர்கொள்கின்ற வகை மாதிரியான சந்தர்ப்பம் பறறிய பண்பாட்டு வரைவிலக்கணத்தைக் கற்றுக்கொள்கின்றார்கள். இந்நிலையில் தனியாளது நடத்தை சமூக பண்பாட்டுச் சூழலினால் வடிவமைக்கப்படுகின்றது.

சமூக பண்பாட்டு நிலைகள் உருவாக்கும் சந்தர்ப்பத்துக்கும், தனிமனிதரது தன்னியலபான வரைவிலக்கணத்துக்குமிடையே முரணபாடுகளும் உராய்வுகளும் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வகையில் முன்னர் குறிப்பிட்ட விடயங்களோடு ஒப்பிடும் போது தோமசின் கருத்து மாற்று வகையானதாக அமைந்தது.

சமூக உளவியல், கல்வியியல், கலை இலக்கிய ஆக்கங்கள் முதலிய துறைகளில் குறியீட்டு இடைவினைக் கோட்பாடு சமீபகாலமாக மேலும் வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளது.

அண்மைக்காலத்தில் இக்கோட்பாட்டை வளர்த்தவர்களுள ஹேர்பட் பல்மா **(H.Bulmer)** குறிபபிடத்தக்கவர். சமூக ஒழுங்கமைப்பு இடைவினைக் கோலங்களைத் தீர்மானிப்பதில்லை என்பதும், இடைவினைச செயல்முறையின் வழியாக சமூக ஒழுங்கமைப்புக்கள் முகிழ்த்தெழுகின்றன என்றும் பல்மர் கருதினார். உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் சட்டவிதிகள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நிராகரிக்கப்படுகின்றன, மாற்றியமைக்கப்படுகின்றன.

மக்கோல் மற்றும் சிமோன்ஸ் **(Mecall and Simmons)** ஆகியோர் சுய எண்ணக்கரு தொடர்பான பாத்திர இனங்காணல் மாதிரிகையை **(Role Identity Model)** விளக்கினர்.

பாத்திர இனங்காணலில் ஒருவரது இலட்சிய வடிவிலான சுயபடிமம் சிறப்பார்ந்த இடத்தை வகிக்கின்றது. பாத்திர இனங்காணல் பாத்திர ஆற்றுகைச் செயல்முறையின் வாயிலாக வெளிபபட்டு நிற்கும். இவ்வாறு ஆற்றுகை செய்யும் பொழுது கிடைக்கப்பெறும் துலங்கல் ஒருவரது பாத்திர இனங்காணலைப பாதிக்கும். பிறரிடமிருந்து எதிர்ப்பு வரும்பொழுது குறித்த நபரிடத்தும் எதிர்மறைப் பண்புகள் மேலோங்கும்.

பிறருடன் இடைவினைகள் மேற்கொள்வதில் சுய எண்ணக்கரு பலம்மிக்க விசையாக விளங்குகின்றது. அதன் அடிப்படையாகவே ஒருவருக்குரிய விருப்புக்களும், தெரிவுகளும் அமைகின்றன **(Mecall and Simmons, 1978,p.78-82).**

குறியீட்டு இடைவினைக் கோட்பாட்டை வலியுறுத்துவோர் மனிதரது விலகல் நடத்தைகளை இடைவினைகளின் அடிப்படையாகவே விளங்குகின்றனர். விலகல் என்பது ஒருவரது பிறப்புடன் கூடிய செயல் என்ற கருத்தை இவர்கள் நிராகரிக்கின்றார்கள். இடைவினை நிகழும் சமூகச் சூழலுக்கேற்றவாறு விலகல் பற்றிய அணுகுமுறைகளும் மாறுபட்டு நிற்கும்.

குறியீட்டு இடைவினையியல் தொடர்பாக அண்மைக் கால முன்மொழிவுகளைத் தந்தவர்களுள் கொவ்மன் குறிப்பிடத்தக்கவர். ஒவ்வொருவரதும் நடிபங்குகளை அரங்கியல் மொழியைப் பயன்படுத்தி அவர் ஆராயலானார். மற்றவர்களைப் பற்றி ஒருவர் தமது மனதிலே வைக்கின்ற பதிவுகளே அவர்களது நடத்தைகளை நெறப்படுத்துகினறன. இந்த நெறிபபாடுக்கு ஏற்ப ஒருவர் தமக்குரிய உடைகளையும், பௌதிக சூழலையும் அமைத்துக்கொள்ளுகின்றார்.

இடைவினை நிகழும் சந்தர்ப்பம பற்றிய ஆய்வும இவரால் முன்னெடுக்கப்பட்டன. சநதர்ப்பங்கள் பௌதிகப் பரிமாணங்களையும், சமூகப பரிமாணங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகனறன. தமது சுய எண்ணக்கருவுக்கு சமூக ஆதரவைப் பெறும் பொருட்டுத் தனிநபர்கள் தமது இடைவினைகளை மற்றவர்கள் மீது ஒழுங்கமைத்துக் கொள்ளுகின்றார்கள்.

பேராசிரியர்
சபா.ஜெயராசா

குறியீட்டு இடைவினைகள் பற்றிப் பொதுவாக ஆய்வு செய்வோர் நுண்பாக நிலைகளில் தனிமனிதரை நடுநாயகப் படுத்தி மேற்கொள்கின்றார்கள். பரந்த சமூகமும், சிக்கலான தொடர்புமுறைகளும், சமூக வரலாற்றுப் போக்கின் அழுத்தங்களும், பொருளாதார உற்பத்தி உறவுகளின் செல்வாக்குகளும் அவர்களது ஆய்வுகளிலே நிறைவுகொள்ளாதித்தல் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவர்கள் குறிப்பிடும் சமூக உளவியலின் தளம் மிகவும் சுருங்கிய ஒரு தளமாகவே அமைந்து விடுகின்றது.

*நன்றி- கல்வியியலாளன்*

---

## நிலா

(..7.ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அன்று இரவு நிம்மதியாய் நிலா உறங்கிப்போக, அக்கா ஈரம் பதிய அவள் கன்னத்தில் முத்தமுட்டாள். திடீரென எழுந்த நிலா அக்காவை நோக்கினாள். அவள் நிலாவைப் பார்த்து கண்ணீர் வடித்தாள்.

'இதுக்குப் பதிலாக நான் உனக்கு என்ன செய்யப் போறேன் என்று தெரியவில்லையே நிலா' திரும்பத் திரும்ப இதே வார்த்தைகளையே அவள சொல்ல, நிலா மென்மையாய் தாழ்ந்த குரலில் அவளிடம் கேட்டாள்.

'என்னை உன் கல்யாணத்திற்குக் கூட்டிக்கொண்டு போவியா அக்கா...?'

'நீ இல்லாமல் நான் கல்யாணமே செய்ய மாட்டேண்டீ' என்று அக்கா அவளைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

அன்று விடியற்காலையில் வழக்கம்போல் நிலாவுக்குக் கனவு வந்தது. உமாதேவியார் மேலிருந்து கீழ் இறங்கி வந்து இவளைப் பார்த்துச் சிரிக்க கனவு முற்றுப் பெறுகிறது.

உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டாள். முழங்காலுக்குக் கீழே எதுவுமே இல்லாமல் உடம்பே அத்துடன் முடிந்துவிட்டது மாதிரி வெறும் வெற்றிடமாய்... நிலா தன் பொம்மைக் கால்களை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டாள்.

(யாவும் கற்பனை)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 37

## பழனியப்பனின் பரமகருணை



1945ஆம் ஆண்டில் காங்கேயம் என்ற ஊரில் விரிவுரைக்குச் சென்றிருந்தேன். அதிகாலையில் வழிபாடு செய்து விட்டு ஆறு மணிக்குப் பழனிக்குப் போகும் பஸ்ஸில் ஏறினேன். அந்த பஸ் காலை 11மணிக்குப் பழனியைச் சேரும். 11-30 மணிக்கு ரயில் ஏறி மாலை மதுரை போக வேண்டும். நான் ஏறி வந்த பஸ் பழனிக்கருகில் வந்தவுடன் ரயில்வே கேட்டு மூடப்பட்டிருந்தது. வழியில் பல மாட்டுவண்டிகள் குறுக்கிட்டபடியால் பஸ் ரயில்வே நிலையத்தை அடைவதற்குச் சிறிய தாமதமாகி விட்டது. பஸ்ஸை விட்டு இறங்கி மதுரைக்கு ரிக்கெட் எடுத்துக்கொண்டு கூலிகள் சாமான் எடுக்க ரயிலிடம் விரைந்து ஓடினேன். அந்த ரயில் என்னை உதாசீனம் செய்து விட்டு, பத்தடி தூரம் இருக்கின்ற பொழுது புறப்பட்டு விட்டது. என் மனம் ஒடிந்துவிட்டது.

பழனி ரயில்வே ஸ்டேஷனிலுள்ள காவல் துறைநிலையத்தில் என்னுடைய சாமான்களை வைத்துவிட்டு ரயில் நிலையத்திலுள்ள உணவு விடுதியில் உணவு செய்தேன்.

காவல்துறை நிலையத்தில் அமைதியாக அமர்ந்து கட்டுரைகள் எழுதினேன். குறிப்பிட்டபடி பிரயாணம் நடைபெறவில்லையே என்று மனத்தின் அடித்தளத்தில் ஒரு ஏக்கம் இருந்தது. மாலை 5-30மணிக்கு ரயில் வந்தது. அதில் ஏறி மதுரையை நோக்கிப் புறப்பட்டேன். நான் ஏறிய முதல் வகுப்பில் தனித்தனி அறைகள் இருந்தன. அவற்றுள் ஒரு அறையில் தகுதியுள்ள ஒருவர் அமர்ந்திருந்தார்.

அவர் என்னை அன்புடன் வரவேற்றுக் கும்பிட்டு உரையாடினார். "உங்களைக்கண்டு பேச வேண்டுமென்று பலகாலம் முயன்றேன். முடியவில்லை. இன்று பழனியாண்டவனுடைய திரு வருள் கூட்டி வைத்தது. மாதந்தோறும் கார்த்திகையில் பழனியில் தண்டாயுதபாணிக்கு அடியேன் அபிஷேகம் செய்கின்றேன். தாங்கள் பழனிவந்து ஒவ்வொரு கார்த்திகையிலும் சொற்பொழிவு செய்ய வேண்டும். அதற்கான பொருளை நான் தருவேன்" என்று கூறி நூறு ரூபாய் என்னிடம் நீட்டினார்.

நான் இதனால் கார்த்திகை தோறும் பழனியப்பனைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் என்று கருதி அதற்கு ஒப்புக்கொண்டேன். அது முதல் தவறாமல் மாதந்தோறும் பழனி சென்று தண்டாயுதபாணியைத் தரிசித்து மலைமீது விரிவுரை செய்து வந்தேன்.

1945இல் தொடங்கிய இந்த விரிவுரைத் தொடர் 1955வரை நடைபெற்றது. 1955இல் மலாயாவுக்குப் போன பொழுது நின்றுவிட்டது. இந்த பத்தாண்டு தொடர்ந்து விரிவுரை செய்த பொழுது இரண்டு முறை பம்பாயிலிருந்து வந்தேன். மூன்று முறை கொழும்பிலிருந்து வந்தேன். பழனித் திருப்புகழ் முழுவதற்கும் உரை நிகழ்த்தினேன். அன்று ரயில் தவறியதாலன்றோ பழனியாண்டவனைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

## ஆண்டவன் இட்ட அடையாளம்

1955 இல் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதருடைய திருக்கோயிலில் திருமதில் திருப்பணி செய்து கொண்டிருந்தேன். இந்தத் திருப்பணிக்கு உதவியாகத் திருப்பணிக் குழுவினர்கள் அரும்பாடு பட்டார்கள்.

ஒரு சமயம் சின்ன காஞ்சிபுரம் பர்மாஷெல் ஏஜண்டு திரு.சுந்தரராஜ ஐயங்காரிடம் வசூலுக்கு என்னை அழைத்துக்கொண்டு சென்றார்கள். சிவாலயத் திருப்பணிக்கு வைணவர் பணம் தருவாரா? என்று நான் மனதில் எண்ணிக்கொண்டேன்.

ஐயங்கார் எங்களை அன்புடன் வரவேற்றார். காஞ்சிபுரத்தில் மட்டுமே கிடைக்கின்ற பன்னீர் சோடாக்களை வாங்கி எங்களுக்கு அளித்தார்.

அவர் எங்களைப் பார்த்து "என்ன விஷயம்" என்று கேட்டார். நான் "ஏகாம்பரநாதருடைய திருக்கோயிலின் திருப்பணி செய்கின்றேன்; அதற்குத் தாங்கள் 100 மூட்டை சிமிட்டி வாங்கித் தாருங்கள். நல்ல புண்ணியம்" என்றேன்.

அவர் "நல்ல காரியம் தங்களைப் போன்ற உத்தமர்கள் இதில் ஈடுபடவில்லையானால் இந்த நல்ல பணிகள் நடைபெற மாட்டா, எனக்கு சிவவிஷ்ணு பேதங்கிடையாது. ஒவ்வொரு சோம வாரமும் ஏகாம்பர நாதர் கோவிலுக்குப் போவேன். சனிக்கிழமை தோறும் வரதராஜாவின் கோயிலுக்குப் போவேன். ஒவ்வொரு மாதமும் சஷ்டிக்குத் திருத்தணிக்குப் போவேன்.

எனக்கு சந்தானம் இல்லை. என் இளைய மனைவியுடன் ஒரு சோமவாரம் ஏகாம்பரநாதருடைய கோயிலுக்குப் போயிருந்தேன். என் மனைவியும், நானும் மாமரத்தை வலம் வந்தோம். என் மனைவியின் வலத்தோளில் ஒரு மாம் பிஞ்சு விழுந்தது.

அந்த மாமரம் வேதத்தின் வடிவம் என்று பெரியவர்கள் கூறுகின்றார்கள். இந்த மாம் பிஞ்சு சிவனருள் என்று கருதி அதனை மாவடிவத்திலுள்ள சிவலிங்கத்தின் திருமுன்வைத்து நிவேதனஞ் செய்து அவளை உண்ணுமாறு கூறினேன். அவள் கருவுற்றாள். பெண் குழந்தை பிறந்தது.

பிறந்த குழந்தையின் வலத்தோளில் சிறு மாம்பிஞ்சு போன்ற கரியமச்சம் இருந்தது. ஆண்டவன் தான்தந்த வரப்பிரசாதம் என்று அந்த அடையாளத்தை இட்டான் போலும். நீங்கள் கண்ணாரப் பாருங்கள்" என்று கூறி கீழே விளையாடிக் கொண்டிருந்த அந்தப் பெண் குழந்தையை அழைத்தார். குழந்தை அணிந்திருந்த சட்டையைக் கழற்றி எனக்கு அம் மச்சத்தைக் காட்டினார்.

அந்தக் குழந்தைக்கு "ஏலவார் குழலி" என்று பெயர் சூடினாராம். செல்லமாக "ஆளை டாள்" என்று அழைப்பாராம். இறைவனுடைய இந்தத் திருவருட் செயலைக் கண்ணாரக் கண்டேன். தாயாருடைய தோளில் விழுந்த மாம்பிஞ்சின் அடையாளத்தைப் பிறந்த குழந்தைக்கு முத்திரையிட்டது போல் ஆண்டவன் காட்டுகிறான். ஆயிரம் ரூபாய்க்குச் சிமிட்டி வாங்கித் தந்தார்.

## இப்படியும் ஒரு மருமகன்

1951இல் நான் மலாயா சென்றிருந்தேன். ஈப்போவில் பத்து நாள் தங்கி விரிவுரை புரிந்தேன். அது மார்கழி மாதம் விடியற்காலை திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஓதி வழிபாடு செய்வது மரபு, அவ்வாறு அதிகாலை 4மணிக்கே எழுந்து பூசைக்கு அமருவேன். நேரம் ஆக ஆக 4மைல், 5மைலிலிருந்து பல அன்பர்கள் வந்து பூசையில் கலந்துகொள்வார்கள். பூசை முடியும் போது 50, 60அன்பர்கள் பிரசாதம் வாங்கிக்கொள்வார்கள். திருவெம்பாவை உடன் ஓதுவார்கள். பெரும்பாலும் கணவனும், மனைவியுமாக வருவார்கள். ஒரு சகோதரியார் மட்டும் தனிமையில் வருவார். பத்து நாள் ஈப்போவில் கதை முடிந்தவுடன் தைப்பிங் என்ற ஊருக்குப் போனேன்.


தைப்பிங் என்ற ஊரில் டாக்டர் மார்க்கண்டு என்ற அன்பர் வீட்டில் தங்கினேன். அன்று விடியற்காலை வழிபாடு செய்தேன். ஈப்போவில் தனிமையில் வந்த சகோதரி இப்போது கண்வனாருடன் வந்தார். வழிபாடு முடிந்தவுடன் எல்லோரும் பிரசாதம் வாங்கிக்கொண்டார்கள்.

நான் கூடத்தில் வந்து அமர்ந்துகொண்டேன். அங்கு நான் எழுதிய நூல்கள் குவிந்திருந்தன. நான் கட்டுரை எழுதத் தொடங்கினேன். அந்தக் கணவனும் மனைவியும் சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அந்த அம்மையார் கணவன்னைப் பார்த்து சுவாமிகளை வணங்கி விபூதி பெற்றுக்கொள்ளலாம் என்று அழைத்தார்.

(தொடரும்)


## சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுக் காட்சிகள்

திருமலையில்...





வவுனியாவில்...





## முல்லை மாவட்டத்தின் துர்ப்பாக்கிய நிலைமை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் நால்வர் டாக்டர்களாகப் பட்டம் பெற்று வெளியேறுகின்றபோதிலும் அவர்களில் ஒருவர்கூட தமது சொந்த மாவட்டத்தில் கடமையாற்ற விரும்புவதில்லை. இது எமது மாவட்டத்துக்குக் கிடைத்த ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும்.

இந்த நிலையில் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கைலாயநாதன் சுதர்சன் தனது மாவட்டத்தில் சேவையாற்ற விரும்புவதால், அவரை வவுனியா வைத்திய சாலையில் இருந்து முள்ளியவளைக்கு மாற்றம்செய்து தருமாறு மாகாண-சுகாதாரப் பணிப்பாளரை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவசர கடிதம் மூலம் கோரியுள்ளார்.

(ப-128)

## கோரிக்கை

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவில் ஏற்பட்ட பேரழிவின் இடிபாடுகளை அப்புறப்படுத்தி மீட்புப்பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளத் தேவையான தளபாடங்கள் இல்லாததால் அவற்றை மிக விரைவாக அனுப்பிவைக்குமாறு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், பிரதம அமைச்சரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவை அவசர கடிதம் மூலம் கோரியுள்ளார்.

(ப-128)

# அசாம் குடியரசு தினவிழாவில் குண்டுவெடிப்பு
# 10பேர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(கவுகாத்தி)

அசாமில் குடியரசு தின விழா நடந்த மைதானம் அருகே உல்பா தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்றுபேர் காயமடைந்தனர்.



இச்சம்பவததைத் தொடாநது நடந்த தேடுதல் வேட்டையில், பொதுமக்கள் 10 பேரை இராணுவம் சுட்டுக்கொன்றது.

அசாம் மாநிலம், கவுகாத்தியில் போங்கய்கான் என்ற இடத்தில் உள்ள மைதானத்தில் குடியரசு தினவிழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. கவர்னர் அஜய் சிங் தேசியக்கொடி ஏறறினார். முதல்வர் தருண் கோகாய், அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனா.

காலை ஒன்பது மணிக்கு முதல்வர் தருண் கோகாயின் கார், மைதானத்தில் நுழைந்தபோது, மைதானத்தின் சுற்றுச் சுவர் அருகே பயங்கரக் குண்டுவெடித்தது. விழாவுக்கு வந்திருந்த பொதுமக்கள ஓட்டம் பிடித்தனர். இருப்பினும், தேசியக கொடியை கவர்னர் ஏற்றினார். அப்போது, மற்றொரு வெடிகுண்டு வெடித்தது. கர்னர் அசரவில்லை. தேசியக் கொடியை ஏற்றி முடித்தார். வெடிகுண்டுகளை ரிமோட கன்ட்ரோல் மூலம் உல்பா தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர். வெடிகுண்டுச் சம்பவத்தைத் தொடர்நது நடந்த தேடுதல் வேட்டையில் கவுகாத்தியல் இருந்து 21 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹஜோ கிராமத்தில் தீவிரவாதிகள் எனக் கருதி, பொதுமக்கள் பத்துப் பேரை இராணுவம் சுட்டுக்கொன்றது.

மணிப்பூர் மாநிலத்திலும் தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். இமபால் அருகே ஜிரிபம் பகுதியில் இராணுவ வாகனம் சென்றபோது சாலையில் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டைத் தீவிரவாதிகள் ரிமோட் கன்ட்ரோல் மூலம் வெடிக்கச் செயதனர்.

இதில் இராணுவ வாகனம் சிக்கி அதிலிருந்த இரண்டு வீரர்கள் காயமடைந்தனர். குடியரசு தின விழாவைக் காண அவ்வழியே சென்ற பொதுமக்களில் ஐந்து பேர் படுகாயடைந்தனர். காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்த வெடிகுண்டுகள் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டவை. 24 மணி நேரம் முதல் 210 நாட்கள் வரை, எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் வகை யில் இந்தக் குண்டுகளில் புரோகிராம் செயய முடியும். இந்த நவீனமயத்தைப் பயன்படுத்தி, அசாமில் குடியரசு தின விழாவின்போது வெடிக்கும் வகையில் பல மாதங்களுக்கு முன்போ இந்த வெடிகுண்டுகளைத் தீவிரவாதிகள் புதைத்து வைத்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துளளது.

எந்த நாளில், எந்தநேரத்தில் வெடிக்க வேண்டும் என்று வெடிகுண்டில் புரோகிராம் செய்யப்படுகிறதோ, அதன்படி வெடிகுண்டு தானாகவே வெடிக்கும். பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டதால், வெடிகுண்டு கண்டுபிடிப்புக் கருவியிலும இது சிக்காது எனக் கூறப்படுகிறது. (து)

## 113 வயது மனிதர்



உலகிலேயே அதிக வயதானவர் என்று கின்னஸில் இடம்பெறறுள்ளார் 113 வயதாகும் மிலனோ மெர்காடோ டெல் தோரோ.

இவர் போர்ட்டோ ரிகோ நாட்டைச் சேர்நதவர். பிறந்தது 1891 ஆகஸ்ட் 21. மூனறுமுறை திருமணம் செய்து கொணட இவருக்குக் குழந்தைகள இல்லை.

WORLD NEWS

உலக தரிசனம்

# மலைக்கோவிலில் டிரான்ஸ்போமர் வெடித்துச் சிதறியதில் 300 பேர் பலி

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மந்தராதேவி மலைக்கோயிலில் ஏற்பட்ட பயங்கர நெரிசலிற் பெண்கள, குழந்தைகள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். இருநூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மகாராஷ்டிரா, சதாரா மாவட்டத்தில் உள்ளது வேய் தாலுகா. இங்கு மந்த்ராதேவி மலைக்கோயில் உள்ளது. மகாராஷ்டிராவில் பிரபலமான இக்கோயில் மிகவும சிறியது. ஆண்டுதோறும் இங்கு ஜனவரி மாதத்தில் நான்கு நாட்கள் நடக்கும் இத் திருவிழாவின் நிறைவு நாளான கடந்த திங்கட்கிழமை சிறப்பு பூஜைகள், ஆராதனைகள் நடந்தன.

திருவிழா நிறைவை முன்னிட்டு அம்மனுக்கு தீபாராதனை நடந்தது. அப்போது அம்மனைத் தரிசிக்க மக்கள் ஆர்வமுடன ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு கோயில் கருவறைக்குள் செல்ல முற்பட்டதால் கடும் நெரிசல் ஏறபட்டது. 200 பேர் மட்டுமே உள்ளே சென்று வரக்கூடிய இக் கோயிலில் ஆயிரத்துக்கும் மேறபட்ட பக்தர்கள் ஒரே நேரத்தில் உள்ளே நுழைந்ததால் நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தனர்.

அந்த நேரத்தில் மின்கசிவு காரணமாக கோயிலில் இருந்த டிரான்ஸ் போமர் பயங்கர சப்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதனால் பீதி அடைந்த மக்கள் அலறிக்கொண்டு ஓடத் தொடங்கினர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஏராளமானோர் பலியாயினர்.

கோயில் மிகச் சிறியது என்பதால் மீட்புப் பணிகளில் உடனடியாக ஈடுபட முடியவில்லை. உடல்களை மீட்பதிலும், படுகாயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்புவதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 300க்கும் அதிகமானோர் பலியானதுடன் 200க்கும் மேற்பட்டோர் படுகாயடைந்துள்ளதாகவும், இந்த எண்ணிக்கை மேலும் உயருமென்று அஞ்சப்படுவதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் சதாரா, புனே பகுதிகளில் உளள மருததுவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (து)



ஜேர்மனியில் தொழில்நுட்ப சாதனங்கள் தயாரிப்பு நிறுவனமான ஜி-ஹாங், மனித உடலுக்கு தீங்கிழைக்கும் கதிர்வீச்சற்ற செல்பேசிகளைத் தயாரித்துள்ளது. இதனை மும்பையில் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் அறிமுகம் செய்து வைத்தார்.

# வீரப்பனும் கூட்டாளிகளும் விஷம் வைத்துக் கொல்லப்படவில்லை

## ஆய்வின்மூலம் கண்டறிவு

வீரப்பனும் கூட்டாளிகளும் விஷம் வைத்துக் கொல்லப்படவில்லை என்று இரசாயனப் பரிசோதனை ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி வீரப்பனும் கூட்டாளிகளும் தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே மலைக்கிராமத்தல் வைததுச் சுட்டுககொலலப்பட்டனர். வீரப்பன் கும்பலுடன் நடந்த மோதலில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அதிரடிப்படை கூறியது.

ஆனால் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் மயக்க மருந்து கொடு த்து பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டதாக உண்மை கண்டறியும் குழுவினரும் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், வீரப்பன் விஷம் வைத்துக்கொல்லப்படவில்லை என்று இரசாயனப் பரிசோதனையில் தெரியவநதுள்ளதாகக் கூறப்படுகிறது.

வீரப்பன் உயிருடன் இருக்கும் போதே அவனது உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்துள்ளதாகவும, அதன கார்ரணமாகவே அவனும், கூடடாளிகளும இறந்துள்ளதாகத் தடவியல் பிரிவின இரசாயனப் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கின்றன.

வீரப்பன் மற்றும் கூட்டாளிகளின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட குண்டுகள், குடல் பகுதி ஆகியவற்றில் நடந்த இரசாயனப் பரிசோதனையிலிருந்து இந்த முடிவுகள் தெரியவந்துள்ளன. (ற)



வழக்கமான நடைமுறைகளைத் தகர்த்தும் பாதுகாப்பு வலையத்தை மீறியும் மக்களைச் சந்தித்து வருகிறார் ஜனாதிபதி அப்துல்கலாம். டில்லியில குடியரசு தினவிழா நிகழ்ச்சி முடிந்ததும் ராஷ்டிரபதி பவனில் நடந்த நிகழ்ச்சியில் கடும் பாதுகாப்பையும் மீறி பொதுமக்களைச் சந்தித்து கைகுலுக்கி குடியரசுதின வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# அமெரிக்க ரயில் விபத்தில் 9பேர் பலி

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பயணிகள் ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 9பேர் பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

லொஸ் ஏஞ்சல்ஸின் புறநகரப் பகுதியான கிளின்டேல் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு பயணிகள் ரயில்கள் இரணடு ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு விபத்துக்குள்ளாகின. இதில் 9பேர் வரை உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகினறனர். பலரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால், பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ரயில் பாதையில் தவறுதலாகக் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்ததால், இரண்டு ரயில்களும் மோதி இந்த விபத்து நடந்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. (து)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை

அந்த ஆள் மிகவும் நல்லவன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் சார்! கடைசி நேரத்தில் காலை வாரி விட்டான் என்று கூறி அலுத்துக் கொள்பவர்கள் இந்த உலகத்தில் பலருண்டு. ஒருவரை 'நல்லவர்' என்று நாம் நம்பிக்கொண்டிருந்து அவன் வேறுவிதமாக நடந்து கொண்டால் நமக்கு மிகவும் கஷ்டமாகிவிடும் அதே மாதிரி குறை நம்மிடமும் உண்டு.

இந்த உலகத்தில் எதையும் நல்லவிதமாக எடுத்துக் கொள்பவர்களும் உண்டு. கெட்டவிதமாக நினைத்துக் கொள்பவர்களும் உண்டு. நீங்கள் எந்த நிறத்தில் கண்ணாடி மாட்டியிருக்கிறீர்களோ அதே நிறத்தில் தான் இந்த உலகமும் தெரியும் என்று சொல்கிறார்களே அது இதைத்தான்.

புத்தருடைய சீடர் ஒருவர் இருந்தார். அந்த புத்த பிக்கு தீட்சை வாங்கிக் கொண்டு தர்மபிரசாரத்திற்காக வெளியூர் செல்ல இருந்தார். அந்த நேரத்தில் புத்தர் அந்த சீடரை அழைத்து விசாரித்தார். " நீ எந்த பிரதேசத் தில் தர்மயாத்திரை செய்யப்போகிறாய்?" என்றார். "சுவாமி! நான் சூனாபராந்தகம் எனும் பிரதேசத்தில் தர்ம பிரசாரம் செய்யப் போகிறேன்" என்றார்.

"அந்தப் பகுதியில் உள்ள மக்கள் உன்னைப் பேசினால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார். "நான் சந்தோஷப்படுவேன்" என்றார் அவர். 'ஏன்?' என்று கேட்டார் புத்தர். "நல்லவேளை, அவர்கள் பேச்சோடு விட்டார்கள். அடிக்கவில்லை அதனால் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நினைப்பேன்" என்றார்.

"சரி அவர்கள் உன்னை அடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்... அப்போது என்ன செய்வாய்?", என்றார். "அடடா! இவர்கள் எவ்வளவு நல்லவர்கள் ஆயுதத்தினால் தாக்காமல் இப்படி வெறும் கையால் அடிப்பதுடன் நிறுத்திக்கொள்கிறார்களே! என்று நினைத்து சந்தோ ஷப்படுவேன்" என்றார்.

"சரி! ஆயுதத்தாலேயே உன்னை அவர்கள் தாக்கிவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள் அப்போது என்ன நினைப்பாய்?" என்று கேட்டார். "ஆகா! இவர்கள் இவ்வளவு நல்லவராக உள்ளனரே! பிறவி என்ற தளையிலிருந்து விடுபட இந்த உலகில் ஒவ்வொருவரும் என்ன பாடு பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நான் மிகவும் சுலபமாக முக்தியடைவதற்கு இவர்கள் உதவி செய் கின்றனரே! இவர்களை எவ்வளவு போற்றினாலும் போதாது என்று நினைத்து சந்தோஷப் படுவேன்" என்றார் அந்த சீடர். உடனே புத்தர் அந்த சீடரை மனப்பூர்வமாக வாழ்த்தி வழி அனுப்பினார்.

அந்த சீடரின் மன நிலையை நீங்கள் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் அவரது பார்வையில் இந்த உல கில் எல்லோருமே நல்லவர்கள் தான். அந்த அளவுக்குப் பக்குவம் ஏற்பட்டுவிட்டது அவருக்கு. சிலரது பார்வை வேறுமாதிரி இருக்கும். அடுத்தவர்கள் நல்லது செய்தா லும் கூட அதை நல்லவிதமாக எடுத்துக் கொள்ளத் தெரியாது இவர்களுக்கு.

ஒரு பெரிய மனிதன் இருந்தார். அவருக்குத் தெரிந்த ஒருவர் ஒருநாள் அவரைத் தேடி வந்தார். " ஒரு 50 ரூபா இருந்தால் கொடுங்கள். அடுத்த திங்கட்கிழமை நருகிறேன்" என்றார். அவர் திருப்பிக் கொடுப்பார் என்ற நம்பிக்கை இல்லை இவருக்கு இருந்தாலும் கொடுத்தார். ஆனால் அந்த ஆள் சொன்னபடியே சரியாக அடுத்த திங்கட்கிழமை திரும்பி வந்தார். 50ரூபா பணத்தை சொன்னபடியே திருப்பிக் கொடுத் தார்.

ஒருமாதம் கழித்து மறுபடியும் அதே ஆள் இவரிடம் வந்தார் "ஐயா! 50 ரூபா கடன் வேண்டும்" என்றார். அந்தப் பெரிய மனிதன் " உன்னை நம்பி கடன் தர முடியாது போ" என்றார் கோபமாக. "என்ன சார் இது! போன முறை சொன்னபடி சொன்ன நாளில் பணத்தைத் திருப்பி கொடுத்தேனே என்னை நம்பமுடியாது என்கிறீர்களே" என்றார். "ஆமாம்! போனமுறை உன்னிடம் நான் பணம் கொடுத்த போது அதை நீ திருப்பித் தர மாட்டாய் என்று மனப்பூர்வமாக நம்பினேன்! ஆனால் நீ அந்த நம்பிக்கை யைப் பொய்யாக்கி விட்டாய்! என் நம்பிக்கையை நாச மாக்கிய உன்னை மீண்டும் எப்படி நம்புவது? போய் வா" என்றார்.

இப்படி ஒரு நிலமை வந்து விடக்கூடாது என்ப தற்குத் தான் இந்தக் காலத்தில் பல பேர் ஒருவரிடம் ஒரு முறை கடன் வாங்கிவிட்டால் அடுத்த முறை அவர் முகத்தில் முழிப்பதில்லை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நாட்டை மீளக்கட்டியெழுப்பும் செயற்றிட்டங்களில்

# அரசு-புலிகள் ஒன்றிணைந்து செயற்படுவது மனிதாபிமான அடிப்படையிலேயாகும்

(கொழும்பு)

நாட்டை சுனாமி அழிவில் இருந்து மீளக்கட்டியெழுப்பும் முகமாக அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவது ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகும். ஆனால் அது சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான எவ்வித உடன்பாடுகளையும் தற்போது கடைப்பிடிக்கப் போவதில்லை என தேசிய அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான மையம் தெரிவித்துள்ளது.

இந்த செயலகத்தின் பிரதானிகளான தாரா டிமெல் மற்றும் மனோதித்தவெல ஆகியோர் இத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துரைக்கும் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சுனாமி அனர்த்தத்திற்குள்ளான பகுதிகள் தற்போது தீவிரமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் தனியார்துறை, சிவில் சமூகம் மற்றும் சர்வதேசம் ஆகியவற்றின் உதவியுடன் தேசிய நடவடிக்கைளுக்கான மையம் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லமுடிந்துள்ளது.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வகையிலான செயற்பாட்டுக்குழு விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதேநேரம் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கப் பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சுனாமியினால் இடம்பெயர்ந்தோருக்கு தற்காலிகமாக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையின் முதற்கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் திட்டமிட்டபடி நிரந்தர வீடுகள் அதன் பின்னர் அமைக்கப்படவுள்ளன.

சுனாமியினால் உயிர் இழந்தோரின் தொகையில் முரண்பாடுகள் காணப்பட்டாலும் சுமார் 40 ஆயிரம் பேர் இவ் அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்திலேயே கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் திட்டம் மீள் பரிசீலனை செய்யப் படவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.(ற-4)

# நீர்முகாமைத்துவத்தில் நெருக்கடி நிலை பிரதியமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நீர்வளத்திற்கான விலையினை நிர்ணயிக்காமல் நீர்முகாமைத்துவம் செய்வதில் நெருக்கடி நிலை காணப்படுவதாக பிரதி அமைச்சர்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கு தமது எதிர்ப்பு இல்லை என பிரதி அமைச்சர் கூட்டமைப்பின் ஒருங்கமைப்பாளரும் பிரதி அமைச்சருமான டிலான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் நீர்முகாமைத்துவம் என்ற பெயரில் விவசாயத்திற்காக விவசாயிகள் பெற்றுக்கொள்ளும் நீருக்கு விலை நிர்ணயிப்பதை நாம் எதிர்க்கிறோம்.

ஆரம்பம் முதலே நாம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நீர்வளத்தை தனியார் மயமாக்குவதற்கு உருவாக்கப்பட்ட சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் செயற்பட்டு வருவதாக மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான சட்டபீட சங்கம் இதற்கு முன்னர் குற்றம் சுமத்தியிருந்தது. மார்ச் மாதம் முடிவடைவதற்கு முன்னர் இந்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு கூட்டமைப்பு அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் தேசிய நீர்க் கொள்கைக்காக அமைச்சரவையில் அனுமதி கிடைக்கவில்லை என விவசாய கால்நடைகள் அமைச்சர் அனுர குமாரதிஸநாயக்க தெரிவித்துள்ளார்.

விசேட குழுவொன்றை நியமித்து அதன்மூலம் தேசிய நீர்க்கொள்கையை தயாரிப்பதற்கு மாத்திரமே அமைச்சரவை அனுமதி வழங்கியதாகவும் அவர் மேலும் கூறினார்.

(க-9)

# கொரியாவில் சட்டவிரோதமாக குடியேறிய இலங்கையர்களுக்கு விஷேட சலுகை

(கொழும்பு)

கொரியாவில் சட்டவிரோதமாகக் குடியேறி தொழில்புரியும் இலங்கையர்களுக்கு இலங்கையில் சுனாமியினால் ஏற்பட்ட அழிவுகளைக் கவனத்திற் கொண்டு சலுகைகளை வழங்க அந் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சட்டவிரோதமாக அங்கே தொழில்புரிந்து வருகின்ற இலங்கையர்களுக்கு ஜனவரி 5ஆம் திகதி முதல் ஏப்ரல்10ஆம் திகதி வரையிலான கால எல்லைக்குள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு கொரிய அரசாங்கம் சலுகைகளை வழங்கியிருப்பதாக தொழில் அமைச்சர் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால எல்லைக்குள் நாட்டைவிட்டு வெளியேறும் இலங்கையர்களுக்கு எதுவித அபராதத்தையும் விதிப்பதில்லை என்றும் கொரிய அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கொரியாவில் இருந்து வெளியேறிச்செல்லும் இலங்கையர்கள் சட்டபூர்வமாக தொழில் வாய்ப்பினைப் பெற்று மீண்டும் கொரியாவிற்குள் வருவதற்கு தடை விதிக்கப்படமாட்டது எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயவிருப்பின் பேரில் மேற்படி கால எல்லைக்குள் வெளியேறுபவர்களுக்கு மீண்டும் தொழில் வாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்குவதற்கும் கொரிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.25 000 கொடுப்பனவாக வழங்க வேண்டும்

## ஜோசப் மைக்கல் பெரேரா வேண்டுகோள்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் 25ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தால் தற்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு போதியதாக இல்லை என்றும் அதில் மக்கள் திருப்திப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீண்டெழுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஐக்கியத்துடன் செயற்பட்டு நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பாடுபட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை அரசாங்கம் ஒருங்கிணைத்துச் செயற்படுத்துகிறது

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை அரசு ஒருங்கிணைத்துச் செய்து வருகின்றது. சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை அரசு பரிபூரணமாக வழங்கி வருகின்றது என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் துயர நிகழ்வுக்குப் பின்னர் நடக்கக்கூடுமென அஞ்சப்பட்ட தொற்றுவியாதிகள் எதுவும் பரவாமல் பார்த்துக் கொள்வதுதான் அரசு எதிர் நோக்கும் இன்றைய முக்கிய சவாலாகும்.

இரண்டாவது, இந்த உடனடி நிவாரண நடவடிக்கைகளுக்கு மேல் இடைப்பட்ட கால மீள் கட்டமைப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைக்கான திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது.

இந்தத்திட்டம் தயாரிக்கப் பட்ட நிலையில் உதவிபெற உறுதியளித்துள்ள கொடையாளி நாடுகள் மற்றும் இலங்கையின் முன்னேற்றத்துக்கான கூட்டாளிகளுடனும் இந்த நிவாரண மறுவாழ்வு நடவடிக்கைகள் குறித்து அரசு ஏற்கனவே பேசத்தொடங்கியுள்ளது என ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நிவாரண உதவி இதுவரை சர்வதேச நாடுகளிடம்இருந்து எந்தளவிற்கு கிடைத்திருக்கின்றது எனக் கேட்கப்பட்ட வினாவிற்குப் பதிலளித்த ஹரீம்பீரிஸ்,

இதில் 2 விடயங்கள் இருக்கின்றன. ஒன்று இந்த உதவிகள் இதுவரை பொருளாக சேவைகளாகக் கிடைத்துள்ளன. சில உதவிகள் நிதியுதவிகளாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. மீள் கட்டமைப்பு என்ற கட்டத்துக்கு இப்பொழுது வருகின்றோம். நிவாரணப் பணிகளுக்கென்று சுமார் 2 மில்லியன் டொலர்கள் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது பல்வேறு ரூபங்களில் வரலாம் எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அரசின் நிவாரண உதவிகள் சரியாகப் போய்ச் சேரவில்லை. எனவே, சர்வதேச சமூகம் நேரடியாகத் தங்கள் பகுதிகளுக்கு உதவி வழங்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிவருவது குறித்து அவரிடம் கேட்டபோது,

ஒரு விடயத்தை மனதில் இருத்தி வைத்திருங்கள். வடக்கு கிழக்குப் பிரச்சினைகள், நிவாரணப் பணிகள் பற்றி விடுதலைப் புலிகளுடன் அரசு வாக்குவாதங்களில் ஈடுபடுவதில்லை. ஏனெனில், அரசின் நிலைப்பாடு இந்த நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் ஈடுபடுத்துவதேயாகும்.

விடுதலைப் புலிகளையும் இந்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுமாறு ஏற்கனவே அரசாங்கம் அழைப்புவிடுத்திருந்தது. இதனைச் செய்வதற்கான வழிமுறைகளையும் இருதரப்பும் ஆராய்ந்து வருகின்றன.

வடக்கு-கிழக்கில், உள்ள மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு நிவாரணப்பணிகள் குறித்த ஆவணங்கள் உள்ளன. இவற்றை விடுதலைப் புலிகளின் சில தலைவர்களும் உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

உதவி நேரடியாக வழங்கப்படுவது குறித்த விடயத்தில் சர்வதேச நாடுகளில் சில தெளிவான பழக்கம் இருக்கின்றது.

வெளிநாட்டு அரசுகள் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இந்த விடயங்களில் இணைந்து செயற்படுவதில்லை. இந்த விடயத்திலும் அப்படித்தான் இருக்கும். இலங்கை அரசின் கொள்கையும் அதுதான் எனவும் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

### வெளியீடு

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கியலுக்கான இதழான "ஆற்றுகையின்" பன்னிரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

ஈழத்து கூத்து விழாவினை மையப்படுத்தி நாடகத்துறை சார்ந்த பல்வேறு விடயங்களுடன் இது வெளிவந்துள்ளது.(ப-51)



அண்மையில் சுனாமி அனர்த்த அழிவுகளைப் பார்வையிடவும், நிவாரணப் பொருட்களைக் கையளிக்கவும் வடமராட்சிக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவர் நிருபமாராவ் தும்பளை சாரதா ஆச்சிரமத்தில் வழிபாட்டில் கலந்துகொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். படம் :- சு.கணபதிப்பிள்ளை

## "சுனாமி" நிவாரண நிதிக்கான தொடரைக் கைப்பற்றியது நியூஸி.

உலக லெவனுக்கு எதிரான சுனாமி கிரிக்கெற் தொடரை நியூஸிலாந்து அணி கைப்பற்றியது.

சுனாமி நிவாரண நிதிக்காக ஷேன்வோர்ன் தலைமையிலான உலக லெவன் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட கண்காட்சி ஒருநாள் தொடரில் மோதியது. நியூஸிலாந்து கிரிக்கெற் அணி இரு போட்டிகள் முடிவில் இரு அணிகளும் 1-1என்ற சமநிலை வகித்தன. தொடரைத் தீர்மானிக்கும் கடைசிப் போட்டி ஹேமில்டன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது. வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில் டாஸ் வென்று பேட்டிங் செய்தது உலக லெவன் அணி. கிறிஸ்கெய்ர்ன்ஸ் (6/12) முன்னாள் கிரிக்கெற் சர்வதேசரக்ப வீரரான ஜெப்வில்சன் (3/6) பந்து வீச்சில் சுருண்டது. உலக லெவன் 20.5ஓவர்களில் வெறும் 81 ஓட்டங்களுக்கு உலகலெவன் அணி ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக நிக்நைட் 43 ஓட்டங்கள் எடுத்தார். ஐந்து பேர் டக்அவுட் ஆனார்கள்.

அடுத்துக் களமிறங்கிய நியூஸிலாந்தும் தடுமாறியது. யாரும் நின்று ஆடவில்லை. இம்முறை ஹார்வி (4/17)கலக்கினார். இலக்கு குறைவு என்பதால் பிரச்சினை இல்லை. 15.2ஓவர்களில் 6 விக்கெற்றுக்களை இழந்து 83 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெற் வித்தியாசத்தில் போட்டியை வென்றது நியூஸிலாந்து. சுனாமி கிரிக்கெற் தொடரை 2-1என்ற முன்னிலையில் கைப்பற்றியது நியூஸிலாந்து. இந்தத் தொடர் மூலம் சுமார் 4 கோடி ரூபாய் அளவுக்கு நிதி திரட்டப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து கிரிக்கெற் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)





மெல்பேர்னில் அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் காலிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் பெண்கள் பிரிவில் நடந்த போட்டியில், அமெரிக்காவின் லிண்ட்சே டேவன்போர்ட் 6-4, 4-6, 9-7 என்ற செட்களில் போராடி அவுஸ்திரேலியாவின் அலிசியா மோலிக்கை வீழ்த்தினார். தனக்கு சமமாக துடிப்புடன் மோதிய மோலிக்கை(இடது) போட்டி முடிந்ததும் கைகுலுக்கி பாராட்டுகிறார் லிண்ட்சே டேவன்போர்ட்.

## முத்தரப்பு ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

அவுஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு கிரிக்கெற்றில் மேற்கிந்தியத் தீவுகள் அணி மீண்டும் தோற்றது. அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையே முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெற் தொடர் நடக்கிறது.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில டாஸ் வென்று பேட் செய்தது அவுஸ்திரேலியா,

பெட்ரோ காலினஸ் (5/43) அபாரப் பந்துவீச்சில் நிலைகுலைந்தது. கிளார்க் ஹைடன் பாண்டிங், லேமேன் என முன்னணிகள் விரைவில் வெளியேற 85ஓட்டங்களுக்கு 5விக்கெற் அவுட். சைமன் கேடிச் (76) பவுலர்கள் பிரெட்லீ (38) கில்லெஸ்பி (44) ஓட்டங்களை கடைசி நேரத்தில் கைகொடுக்க 50ஓவர்களில் 8விக்கெற்றுக்கு 269ஓட்டங்களை எட்டியது அவுஸ்திரேலியா.

270 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை நிலைகுலையச் செய்தார். ஆட்டநாயகன் பிரெட்லீ (4/38) சர்வான் (39) சந்தர்பால் (55) லாரா (29) ஓட்டங்கள் எடுக்க இதுதவிர யாரும் நிற்கவில்லை. 44.5ஓவர்களில் 196 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ஏற்கனவே இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுவிட்ட அவுஸ்திரேலியா 73ஓட்டங்களில் வென்றது. இதுவரை ஆஸி. 26, பாகிஸ்தான் 6, மேற்கிந்தியத் தீவுகள் 4 புள்ளிகள் எடுத்துள்ளன. தொடரின் அடுத்த போட்டியில் பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் அடிலெய்டில் இன்று சந்திக்கின்றன. (ற)

## அன்ரு பிளின்டொப்பிற்குப் பதிலாக மத்யூ ஹொகார்ட்

ஒருநாள் தொடரில் கலந்து கொள்ளாமல் நாடு திரும்புகிறார் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ரு பிளின்டொப்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெற் தொடரில் அசத்திய அன்ரு பிளின்டொம் கணுக்கால் காயம் காரணமாக ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை.

இவர் தற்போது கணுக்கால் வலியால் அவதிப்பட்டு வருகிறார். இதற்கு சத்திரசிகிச்சை ஒன்றே தீர்வு என மருத்துவர்கள் கூறிவிட்டதால் டெஸ்ட் தொடர் முடிந்ததும் இங்கிலாந்து திரும்ப முடிவுசெய்துள்ளார்.

சிறிய ஓய்வுக்கு பின்வரும் ஜூனில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இவர் இடம்பெறுவார் என இங்கிலாந்து அணியின் செய்தித் தொடர்பாளர் டேவிட் கிளார்க் தெரிவித்தார்.

இவருக்குப் பதிலாக ஒருநாள் தொடரில் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான மத்யூ ஹொகார்ட் இடம்பெறுகிறார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

(ற-19)

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு - குறள்

வலம்புரி

## பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம்பெற உதவுக!

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியது.

உறவுகளை இழந்து அவர்கள் படுகின்ற துன்பத்தை காணும்போது இதயமே வெடிக்கும் போல் இருக்கின்றது.

இயற்கை அனர்த்தம் இறைவனின் செயல் என்று ஏற்றுக்கொள்ளும் பக்குவம் காலகாலமாக பின்பற்றப்பட்டுவருவது வழமையான ஒன்று.

அதேநேரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வது அவர்களை அரவணைத்துச்செல்வது அவர்களின் வாழ்வியலுக்கு துணையாக இருப்பது போன்றவை நமது தலையாய கடைமையாகும்.

இதனையே சமயங்கள் வலியுறுத்துகின்றன. 'பக்கத்திருப்பவர் துன்பம் தன்னைப்பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி' என்ற பாரதியின் பாடல்வரிகள் இன்றைய சூழ்நிலைக்கு எத்துணை பொருத்தமானது என்பதை உணர்ந்து கொள்வதும் அவசியமாகும்.

மக்கள் பணியே மகேசன்பணி என்றும் உன்னைப்போல் பிறரையும் நேசியென்றும் இறைக்கொள்கைகள் மனிதனுக்கு அறிவு புகட்டுகின்றன. அதிலும் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உதவி செய்வது இந்த உலகில் நாம்செய்யக் கூடிய மிகப்பெரும் புண்ணிய கருமமாகும்.

இந்தப் புண்ணிய கருமத்தில் மனிதநேயம் மிக்கோர் ஈடுபட்டமை- ஈடுபட்டுவருகின்றமை மன ஆறுதலைத்தருகின்ற அதேவேளை, சிலரின் நடவடிக்கை இதுவா மனித வாழ்கை என்று வேதனைப்படவும் வைக்கவே செய்கின்றது.

ஆம், கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீட்புப்பணிகளில் ஈடுபட்ட சிலர் பாதிக்கப்பட்டவர்களுடன் நடந்துகொண்ட முறைகள் சுனாமி தந்த அதிர்ச்சியைவிட மேலும் ஒருபடி உயர்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக தென்னிலங்கையில் காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பது போல காட்டிக்கொண்ட கயவர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகளை சூறையாடிய செய்திகள் எத்துணைகொடூரமானது.

இதேபோன்றுதான் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணங்களை மோசடி செய்த அமைச்சர்கள், அதிகாரிகள் என்ற பட்டியல் வெளியாகிக்கொண்டு இருக்கின்றது. தாமாகவே முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியவேண்டியவர்களே நிவாரணத்தை சூறையாடுகின்றார்கள் எனில் இதைவிடக் கொடியசெயல் வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

இவை ஒருபுறம், மறுபுறத்தில் சுனாமியால் பாதிக்கப்படாதவர்கள் நிவாரணத்தைப் பெறுவதற்காக முண்டியடிக்கும் பாதகச்செயலும் நடக்கவே செய்கின்றது.

சுனாமி அனர்த்தத்தால் நாம் உயிர் தப்பினோம்,நமது உடைமைகள் பாதுகாக்கப்பட்டன இதற்காக நாம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும் என நினைப்பதை விடுத்து பாதிக்கப்பட்டவர்கள் என பொய்யுரைத்து உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்தில் பங்கு கேட்பது இறைவனுக்கு நாம் செய்யும் துரோகமாகவே இருக்கும்.

எனவே, அன்பு நிறைந்த மக்களே, அதிகாரிகளே இறைவனின் பெயரால் உங்களிடம் கேட்பது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் சென்றடைய உதவுங்கள் அந்தப் பாவச்சொத்தில் யாருமே பங்கு போட்டு விடாதீர்கள். இந்தத்தூய்மையை நீங்கள் கடைப்பிடிப்பது நம்மைப்பாதுகாத்த இறைவனுக்குச் செய்யும் நன்றி உபகாரமாகும்.

# அரசின் கட்டட நிர்மாணத்திற்கான தூர எல்லை மீன்பிடி, சுற்றுலாத்துறையைப் பெரிதும் பாதிக்கும்

## ஐ.தே.க. எம்.பி. மஹிந்த விஜயசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்குள் கட்டடங்களை அமைக்கக்கூடாது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தினை தமது கட்சி எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இத்திட்டமானது ஐக்கிய நாடுகள் சபையின் 28ஆவது சரத்திற்கு எதிரானது என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இத் திட்டமானது இனிவரும் காலங்களில் அனுமதியற்ற கூட்டங்களுக்கு எதிராக விதிக்கப்படலாம் ஆனால் தமது சொந்த இடங்களில் பதிவு பெற்றவர்களை தமது இடங்களை கைவிட்டு விட்டு 100 மீற்றருக்கு அப்பால் செல்லுமாறு கூறுவது அவர்களின் உரிமைகளை மீறும் செயலாகும்.

இதன் காரணமாக மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத்துறை என்பன பாதிக்கப்படும். எனவே அரசாங்கம் கடற்கரையில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்கும் திட்டத்தைக் கைவிடவேண்டும்.

அதற்குப் பதிலாக எதிர்காலத்தில் சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்படும் என்பதனை முற்கூட்டியே அறிந்து அதனை எதிர்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (ற-4)

## தமிழ்ப் பட்டதாரிகளுக்கு சிங்களத்தில் நியமனக்கடிதம்

### பட்டதாரிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

பதிவாளர் நாயகம் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், அரச கரும மொழிகள் திணைக்களம் ஆகியவற்றில் நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் கடந்த மாதம் கொழும்பில் உள்ள புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 700 தமிழ் பட்டதாரிகள் கலந்துகொண்டபோதும் இவர்களது நியமனக்கடிதங்கள் சிங்கள மொழியிலேயே வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நியமனக்கடிதங்கள் சிங்கள மொழியில் வழங்கப்பட்டதனால் இத் தமிழ் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் எந்தெந்தத் திணைக்களங்களில் வழங்கப்பட்டுள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடியாமல் இருந்ததாக பட்டதாரிகள் விசனம் தெரிவித்தனர்.

இவ் வைபவத்தில் அரச கருமமொழி ஆணைக்குழுவின் தலைவர் ராஜா கொலுரே கலந்துகொண்டிருந்த போதும் தமிழ்ப் பட்டதாரிகளுக்குரிய நியமனக் கடிதங்கள் சிங்களத்திலேயே வழங்கப்பட்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான செயற்பாடுகளால் அரச கரும மொழிகள் ஆணைக்குழு செயற்படுகின்றனவா என்பதே கேள்விக் குறியாக உள்ளதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் மேலும் விசனம் வெளியிட்டனர். (ந-19)

## ஜப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் நாளை இலங்கை வருகிறார்

(கொழும்பு)

ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் சாசம் தணிக்குவா மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை சனிக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காகவே ஜப்பான் பிரதி வெளிவிவகார அமைச்சர் இங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்கட்டமைப்பு, மீள்குடியேற்றம் ஆகியன தொடர்பாக இலங்கை அரசாங்கப் பிரமுகர்களுடன் இவர் விரிவாகக் கலந்துரையாடவுள்ளார்.

இவர் தனது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். (ற-9)

## தாதி மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டிருந்த தாதி மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த டிசம்பர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெறவிருந்த இந்நேர்முகப் பரீட்சைகள் யாவும் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 31ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, இம்மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 11ஆம்திகதி வரை நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரையும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நேர்முகப்பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று தாதியர் பயிற்சிப் பாடசாலைகளிலேயே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

### பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கென

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். மாவட்டத்தில் கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மாணவர்களின் நலன் கருதி யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் விசேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அக் கல்லூரியின் அதிபர் யோகராஜன் தெரிவித்தார்.

மேசன் பயிற்சி நெறி, மரவேலை தொழில்நுட்பம், நீர்க குழாய் பொருத்துதல், வீட்டு மின் இணைப்பு, ஓட்டுவேலை போன்ற ஐந்து பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சுனாமியால் பாதிப்படைந்த மாணவர்கள் அடுத்த வாரம் அளவில் இப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பப்படிவங்களின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியை குறிப்பிட்டு அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகளுக்கு ஜப்பானிய அரசே அனுசரணை வழங்குவதால் மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்துமாறு கல்லூரி அதிபர் மேலும் கேட்டுள்ளார். (ற-5)

# மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க பாடசாலைகளுக்கிடையான வலை அமைப்பு

(தென்மராட்சி)

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பயில்கின்ற மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படுவதற்கான நெறிமுறைகளை திட்டமிட்ட ரீதியில் அமுல் செய்வதற்கென தேசிய கல்வி அபிவிருத்தி வலை அமைப்பு எனும் புதிய அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

கடந்த வருடம் யூலை மாதத்தில் நீர்கொழும்பில் நடாத்தப்பட்ட காமன்வெல்த் கல்வி நிதிய செயற்பாட்டுப் பட்டறையில் பங்குகொண்டிருந்த 65க்கு மேற்பட்ட தேசிய பொது நிறுவனங்களின் ஆரம்பகால உறுப்பினர்களின் ஏற்பாட்டிலேயே இப் புதிய வலை அமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கல்விக் கொள்கைகள் கிராமிய மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் சரியான முறையில் அமுல்செய்யப்படுகின்றனவா என்பதனை இந்த வலை அமைப்பு முறைப்படி கண்காணிப்பதுடன், இப்பணியில் அவ்வப்பகுதிகளில் இருக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பாடசாலை மட்ட பொது அமைப்புகளும் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரியவருகின்றது.

பாடசாலைகள் மட்டத்தில் மாணவர் மத்தியில் நட்புறவுச் சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியிலும் இவ் வலை அமைப்பு கூடுதல் கவனம் செலுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ப-16)

## வங்கிகளிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் இருக்கும் வர்த்தகர்களின் வசதியையும் நன்மையையும் கருதி சாவகச்சேரியில் இயங்குகின்ற இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கான சேவை நேரத்தை பிற்பகல் 3 மணி வரை நீடிக்க வேண்டும் என சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேசமயம் சாவகச்சேரியில் இயங்குகின்ற மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்று இலங்கை வங்கிக் கிளையும் சனிக்கிழமைகளிலும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் கோரப்பட்டுள்ளது. (ப-16)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**நம்மிடம் உள்ள சக்தியை நீங்கள் ஓரிடத்தில் பயன்படுத்தலாம். இன்னோர் இடத்தில் இழக்கலாம். ஆனால் மொத்தச் சக்தி என்னவோ எப்போதும் ஒன்றுதான். ஓர் இடத்தில் அலை எழுந்தால் இன்னோர் இடத்தில் பள்ளம் விழுகிறது. ஒரு நாடு பணத்தில் கொழித்தால் மற்ற நாடுகள் வறுமையில் வாடுகின்றன. தீமையை நன்மை சமன் செய்கிறது.**

**சுவாமி விவேகானந்தர்**

## ஒன்றுக்கு ஒன்பது தாய்மார் விவகாரம்

# 'சுனாமி 81' குழந்தையை தாயிடம் ஒப்படைக்க மறுப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது கண்டெடுக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் மருததுவப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்ட ஒன்பது தாய்மார் உரிமைகோரிய 'சுனாமி 81' என அழைக்கப்படுகின்ற மூன்றுமாத ஆண்குழந்தையை உரிய தாயிடம் ஒப்படைக்குமாறு கல்முனை மாவட்ட நீதிமன்றம், கல்முனை வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டும் இதுவரை தாயிடம் பிள்ளையை ஒப்படைக்காது வைத்தியசாலை நிர்வாகம் நொண்டிச்சாட்டுக்கள் கூறிவருவதாக ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சுனாமி அனர்த்த இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கல்முனையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராஜா என்ற ஆசிரியர் மேற்படி குழந்தையை கண்டெடுத்து கல்முனை வைத்தியசாலையில் மருத்துவ சோதனைக்காக ஒப்படைத்திருந்தார்.

இக் குழந்தை வைத்தியசாலையில் இருக்கும்போது ஒன்பது தாய்மார் அக்குழந்தைக்கு உரிமை கொண்டாடினர். இதனால் வைத்தியசாலை நிர்வாகத்துக்குப் பெரும் சங்கடநிலை ஏற்பட்டது.

இந்நிலையில் உரிமைகோரிய ஒன்பது தாய்மார்களில் தாய் ஒருத்தி கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டு குழந்தையைப் பெற்றுத்தருமாறு கோரியிருந்தார்.

இதனையடுத்து விவகாரம் நீதிமன்றுக்குச் சென்றது. இதனடிப்படையில் ஒன்பது தாய்மாரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டது.எனினும் குழந்தையின் உண்மையான தாய ஜெயராஜ் ஜீனிதாவைத் தவிர ஏனைய எட்டுத்தாய்மாரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து குழந்தையை ஜீனிதாவிடம் ஒப்படைக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும் குழந்தையைத் தாயிடம் ஒப்படைக்காது விடயத்தைத் திசைதிருப்பும் நோக்கில் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை மரபணு (டி.என்.ஏ) பரிசோதனை நடாத்தவேண்டுமெனக் கூறி குழந்தையை தாயிடம் ஒப்படைக்க மருத்துவமனை நிர்வாகம் மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவின்படி குழந்தையை தாயிடம் ஒப்படைக்க வேண்டுமெனக்கோரி குழந்தையைக்கண்டெடுத்த ஆசிரியர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சாலமோன் மன்னன் சபையில் ஒரு குழந்தைக்கு இருதாய்மார் உரிமை கோரிய சம்பவத்தைவிட இது சற்று வித்தியாசமாக இருந்தாலும், கடவுள் விடை கொடுத்தும் பூசாரி விடைகொடுக்காத நிலைமை தொடர்வது வேதனைக்குரியது. (த)

# மிதிவெடி அகற்றும் செயற்திட்டம் குறித்து நேற்று விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றல் செயற்திட்டம் குறித்து யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் கண்ணிவெடி அகற்றும் அலுவலகத்தில் நேற்று விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கிராம உத்தியோகத்தர்கள், மிதிவெடி அகற்றும் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் எனப் பலர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் 2004 ஆம் ஆண்டின் மிதிவெடி அகற்றும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் 2005ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் இவ் வேலைத்திட்டத்திற்காக முன்னுரிமைப்படுத்தும் பிரதேசங்கள் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இதேவேளை யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு வழிகாட்டல் குழுவின் முக்கிய கூட்டம் ஒன்று மிகவிரைவில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பல உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தில் 2005 ஆம் ஆண்டின் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இதன் முன்னோடியாக நேற்றைய கூட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-

## திரைப்பட வழங்குநர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சங்கத் தலைவர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் செழியன் கலந்துகொண்டார்.

திரைப்பட வழங்குநர் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து இக் கலந்துரையாடலின்போது செழியனுக்கு எடுத்துக் கூறப்பட்டது. (ச)

## இத்தாலி அரசினால் உதவிச் செயற்திட்டம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செயல்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இத்தாலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்படவுள்ளது. (ச-08)

## அமெ. சமாதான அமைப்பின் பணிப்பாளர் வருகை

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்க சமாதான அமைப்பின் பணிப்பாளர் வெஸ்கியூஸ் நேற்று இலங்கை வந்தார்.

நேற்று மாலை கொழும்பை வந்தடைந்த அவர் இன்று சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப்பார்வையிடுவதுடன் அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்.

ஏற்கனவே இலங்கையில் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இலங்கை வந்துதிரும்பிய அமெரிக்கத் தொண்டர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதன் அவசியம் குறித்தே அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க அரசாங்க நிறுவனமான இந்த சமாதானக்குழு உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரண்டு வருடகால அடிப்படையில் தொண்டர்களை அனுப்பி பணிகளில் ஈடுபடுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

## பொதுமண்டபத் திறப்புவிழா

துன்னாலை தெற்குகிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நியாப் விவசாய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுமண்டபத் திறப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு திறந்து வைக்கப்படும்.

விழாக் குழுத்தலைவர் வை. வசந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-101)

## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் 2004ம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா இன்று மாலை 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-19)

## சுனாமி நிதியம் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் மாநாடு

சுனாமி நிவாரண நடவடிக்கைகள் உரியமுறையில் மேற்கொள்ளப்படாத மாவட்டங்களுக்குப் புதிய அரச அதிகாரிகளையும், மேலதிகாரிகளையும் ஈடுபடுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான கூட்டப்பட்ட விசேட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கருஜெயசூரியா ஆகியோருடன் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கும் நிதி உதவிகள் தொடர்பாகவும், அவ் உதவிகள் தொடர்பான திட்டங்களை பத்திரிகைகள் மூலம் வெளியிடு வதற்கும் இந்தக் குழுக் கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (ச-8)

## ரணில்...

புடைய ஏனையவர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதைவிட பெல்ஜிய தலைநகர் பிரஸெல்ஸிலுள்ள ஐரோப்பிய யூனியனின் தலைமையகத்திற்கும் இலண்டனுக்கும் சென்று பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார்.

மேலும் தற்போது சூரிச் நகரில் உலக வர்த்தக மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்று தங்கியுள்ள ஐ.தே.கவின் கொழும்புமாவட்ட எம்.பி. மிலிந்த மொறகொடவும் இலண்டனுக்கு வெள்ளியன்று சென்று ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்வார். (த-06)

## பட்மின்ரன் பேட்டி

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஆண்களுக்கான வயதுக் கட்டுப்பாடற்ற பட்மின்ரன் போட்டி இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பட்மின்ரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-08)

## சுனாமியால்...

நாம் பயணம் செய்த புகையிரதத்தை முதல் அலை தாக்கியபோது கையடக்கத் தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினேன். இரண்டாவது அலை 36 நிமிடங்கள் கழித்தே அப்பகுதியை மீண்டும் தாக்கியது.

இது பற்றி தகவல் வழங்கியும் பொலிஸார் விரைந்து செயற்படவில்லை. பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் விரைந்து செயற்பட்டிருந்தால் பலரின் உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார். (ச)

# தென் கொரியப் பிரதிநிதிகள் இன்று யாழ். வரவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியில் தென்கொரிய அரசுமேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் சம்பந்தமாக ஆராயவென அந்நாட்டு அரசால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

நேற்று கொழும்பை வந்தடைந்த இக்குழுவினர் இன்று காலை 10 மணியளவில் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்து அங்கிருந்து நேரடியாக தொழில் நுட்பக் கல்லூரிக்குச் செல்வர். அவர்கள் பின்னர் யாழ். அரச அதிபரைச் சந்தித்து சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து ஆராய்வர்.

பின்னர் வடமராட்சிக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதுடன் கொரியக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் உதவிகளையும் பார்வையிடுவர்.

இக் குழுவில் கொரிய கொய்க்கா தலைவர் ஜிம் சக்கயின், வெளிவிவகார அமைச்சர் அன் கில் வென், இலங்கைக்கான கொரியத்தூதுவர் கிமபைன் குவான் மற்றும் பிரதிநிதிகள் அடங்குவர். (ற-5)

## வட - கிழக்கை மீளக்....

கள் இங்கு வந்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோது அவர்களுக்கு எமது மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து விளக்கியதுடன் உலக நாடுகளின் உதவி மற்றும் நிதியுதவிகள், அவசர தேவைகள் எவை என்பதனை அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

தமிழீழத் தேசியத் தலைவர் ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் புனர்வாழ்வுக்குத் தேவைக்காக இயக்கத்தின் முழு அமைப்புக்களையும் பணியில் ஈடுபடுமாறு பணித்திருந்தார்.

ஆழிப்பேரலை தாக்கி அடுத்த கணமே எமது மக்களைக் காப்பாற்றும் பணிகளில் எமது சகல படையணிகளும் துரிதமாக செயற்பட்டு வந்தன என்பதனை நான்விளக்கமாக கூறத் தேவையில்லை. இதைவிட சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசாங்கத்துடனும் பேச்சுக்களை நடாத்த உலகத் தலைவர்களை அழைத்து அவர்களுடன் ஆலோசித்து மக்களின் வாழ்வை வளப்படுதத உரிய நடவடிக்கைகளை எடுக்க முழு முயற்சிகளையும் செய்து வருகிறோம் என்றார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவுக்குச் சென்ற அன்ரன் பாலசிங்கத்துடன் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை ஆகியோரும் சென்றிருந்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக அழிவுற்ற பகுதிகளை அவர்கள் பார்வையிடடனர். (த-04)


**Jaffna National College of Education**

**GRADUATION CEREMONY - 2004**

**Venue:** Jaffna National College of Education Audutorium

**Time :** 28th January 2005 at 3.30 p.m

Awarding of graduation by:

Dr.Thirunavukarasu Kamalanathan
President (J.N.C.O.E)

Blessing by:

Mr.K.Bernard (M:Ed)
President VNCOE

Guest of Honour

Mr.P.Vigneswaran
ZDE Jaffna

(9250) **Co-0rdinator G.C.**


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.